

# சிறுகதை மஞ்சரி

மாதஇதழ்

23

ஆசிரியர்: மு.தயாளன்

இதழ் 23 ஆனி 2022 £4.00

வளர்ந்த - வளரும் படைப்பாளிகளுக்கான களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்காளர்கள்



கமலினி கதிர்
பக்கம் 5
சுவிஸ்



ஏ. எஸ். சற்குணராசா
பக்கம் 7
இலங்கை



அகரா
பக்கம் 12
இலங்கை



அஷ்வினி வையந்தி
பக்கம் 14
இலங்கை



சி. சிறீரங்கன்
பக்கம் 19
இலங்கை



சியாமளா யோகேஸ்வரன்
பக்கம் 22
அவுஸ்திரேலியா



ராஜேந்திரன் ஜித் ஹம்சன்
பக்கம் 25
இலங்கை



எம். சி. ஏ. பரீத்
பக்கம் 28
இலங்கை



அலெக்ஸ் பரந்தாமன்
பக்கம் 30
இலங்கை



பேராசிரியர் யோகராசா
பக்கம் 31
இலங்கை


20 % கழிவு

## SKM BOOKS FOR SALE

20 % கழிவு



300 ரூபா 300 ரூபா 300 ரூபா 300 ரூபா 300 ரூபா 300 ரூபா 200 ரூபா 300 ரூபா 350 ரூபா



200 ரூபா 300 ரூபா 300 ரூபா 300 ரூபா 400 ரூபா

India 400 Rs
London £5 Can/Ame $10
Europe 10 Euro
மேற்குறிப்பிட்ட விலைகளிலிருந்த 20% கழிவில் பெறலாம்

**இலங்கையில் உள்ளவர்கள்**
Commercial bank Account No: 8370042817
**மற்றைய நாடுகளில் உள்ளவர்கள்** உங்கள் விருப்பத்தை skmbooks50@gmail.com இற்கு அனுப்பினால் payment link அனுப்பி வைக்கப்படும்


**வாசிப்பதனால் மனிதன் பூரண மனிதனாகிறான்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரச இயந்திரக் குதிரையை அடையாளம் காண்போம்

இலங்கைத் தீவு கலவரங்களுக்குப் பழக்கப்பட்ட ஒன்றுதான். முன்பு வெவ்வேறுபட்ட இனங்களுக்கிடையே நடந்தது. இப்போ ஒரே இனத்திற்குள் நடக்கிறது. மற்றும்படி எல்லாமே ஒன்றுதான். மக்கள் போராட்டம் ஒன்று ஆரம்பித்துவிட்டதாக பத்திரிகைகள் பக்கங்களை நிரப்பிக் கொண்டிருக்கின்றன.

ஒரு பக்கம் புதிதாக வந்த பிரதமர் போராடுபவர்களை காவல்படைகள் நெருங்கக் கூடாது என்ற நிபந்தனையோடு பதவி ஏற்கிறார். இன்னும் கூடுதலாக காலிமுகத்திடலில் போராடுபவர்களுக்கு உதவுவதற்காக அரசாங்கம் ஒரு குழுவையே நியமிக்கிறது. ஒரு நாட்டின் ஜனாதிபதியை அகற்றுவதற்கான போராட்டத்திற்கு அந்த நாட்டின் பிரதமர் பாதுகாப்பு வழங்குகிறார்.உலகத்தின் எந்த மூலைமுடுக்கிலும் இப்படி நடந்ததில்லையே! ஆக இந்தப் போராட்டம் அரசு இயந்திரத்திற்கு எதிரானதல்ல என்பது மட்டுமே புரிகிறது. இந்தப் போராட்டம் முற்று முழுதாக ஒரு குடும்பத்திற்கு எதிரானது மட்டுமே. முன்னாள் அமைச்சர்களின் வீடுகள் தரைமட்டமாக்கப்படுகின்றன. அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த மக்களுக்குத் தேவையான பொருட்கள் எல்லாம் களவாடப்படுகின்றன. இவற்றையெல்லாம் இராணுவமும் பொலிசும் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன.

இதேபோல்தான் 83 இலும் நடந்தது. இராணுவமும் பொலிசும் பார்த்துக் கொண்டிருக்க தமிழர் வீடுகள் வியாபார ஸ்தாபனங்கள் யாவும் அடித்து நொருக்கப்பட்டிருந்தன. கொள்ளையடிக்கப்பட்டன. இதையும் மக்களின் கிளர்ச்சி என்றே கூறினார்கள். உலக நாடுகளும் அப்போதும் வேடிக்கை பார்த்தன. இப்போதும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றன.

ஆக மொத்தத்தில் இங்கு நடைபெறுவது மக்கள் கிளர்ச்சி அல்ல. ஒரு குடும்பத்திற்கு எதிரான யுத்தமே. ஒரு அரசியல் மாற்றத்திற்கான போராட்டமல்ல. அது முடிந்ததும் எல்லாம் ஓய்ந்துவிடும். மீண்டும் பழைய குருடி கதவைத் திறவடிதான்.

அடிப்படைப் பிரச்சினைகள் என்றுமே தீர்க்கப்படப் போவதில்லை. மக்கள் திட்டமிட்டு ஒரு குடும்பத்திற்கு எதிராகத் தூண்டப்பட்டிருக்கிறார்கள். இந்த அலையில் பொருளாதாரப் பிரச்சினைகளாகட்டும் இனப் பிரச்சினையாகட்டும் கிடப்பில் போடப்பட்டுவிட்டன.

முதலாளித்துவம் தன் கோரநாக்குகளைக் கொண்டு மக்களை வெற்றிகரமாக நக்கிக் கொண்டிருக்கிறது. மக்களும் அதற்கு நெளிந்து வளைந்து தங்களைப் பலியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைய இலங்கைத் தீவின் பிரச்சினைகளுக்கு எந்தக் குடும்பமும் காரணமல்ல . பதிலாக அவர்கள் பயணம் செய்யும் அரச இயந்திரக் குதிரையே காரணம் என்பதை நாம் புரிந்து கொள்ளும் காலத்தில்தான் உண்மையான மக்கள் யுத்தம் வெடிக்கும். அது வரை அதற்காக வேலை செய்வோம்.

**மு. தயாளன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே................


1 **அரச இயந்திரக் குதிரையைத்.......**
ஆசிரிய தலையங்கம்

2 **உள்ளடக்கம்**

3 **விடியலை நோக்கி**
எஸ். ஏ. ஸ்மத் பாத்திமா

5 **பூக்களின் வண்ணங்கள்**
கமலினி கதிர்

7 **செயற்பட்டு மகிழ்வோம்**
ஏ.எஸ். சற்குணராசா

12 **எங்கிருந்தோ வந்த மரணம்**
அகரா

14 **விமர்சனம்**
அஷ்வினி வையந்தி

15 **கரும்பலகை - தொடர்கதை**
மு.தயாளன்

19 **காலத்தின் தீர்ப்பு**
சி. சிறீதரன்

22 **காலத்தின் கோலங்கள்**
சியாமளா யோகேஸ்வரன்

25 **சகபயணி**
ராஜேந்திரன் ஜீத் ஹம்ஷன்

28 **மனிதம்**
எம்.சீ. பரீத்

30 **வாசக பார்வை**
அலெக்ஸ் பரந்தாமன்

31 **மஞ்சரி 22 ஒரு பார்வை**
பேராசிரியர் செ. யோகராசா

32 **சிறுகதை எழுதுவது எப்படி...**
மு.தயாளன்


**சிறுகதை மஞ்சரி 22 இன் சிறந்த மூன்று சிறுகதைகள்**

1. அப்பாயி - தர்சித்
2. வாழ்க்கை வாழ்வதற்கே - கமலினி கதிர்
3. ஏழாம் இடத்தில் செவ்வாய்- ந. ஜெயரூபலிங்கம்

மஞ்சரியின் 25 ஆவது இதழ் (புரட்டாதி) நந்தினிசேவியர் சிறப்பிதழாக வெளிவருகிறது. அவர் சம்பந்தப்பட்ட விடயங்கள் வரவேற்கப்படுகின்றன.

**அட்டைப்பட விளக்கம் 24 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.**


**நன்றிக்குரியவர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு நற்குணதயாளன், திரு ரமணன் நற்குணதயாளன் ,செல்வி சரண்யா தனபாலசிங்கம், திரு வி. மைக்கல் கொலின், செ. யோகராசா, வணசிங்க அச்சகத்தினர், ஓவியர் கைலாசநாதன் ஓவியை கோகிலா டயாளினி


**1000 பேரை இணைப்போம்......**

தாய்மண்ணில் உள்ள பாடசாலைகளுக்கு மஞ்சரியை அனுப்புவதற்கு புலம்பெயர் மண்ணிலுள்ளவர்கள் பங்கு பெறலாம்.
லண்டன்: ஒரு பாடசாலை ஒருவருடம் **£5.00**
ஐரோப்பா: ஒரு பாடசாலை ஒரு வருடம் **6 Euro**
மற்றைய நாடுகள்: ஒரு பாடசாலை ஒரு வருடம் **$10**


**அட்டை வடிவமைப்பு:** ரமணன் நற்குணதயாளன்
**அட்டைப்படம் வரைதல் :** R. கோகிலா டயாளினி
**ஓவியர்கள்:** G. கைலாசநாதன் , R. கோகிலா டயாளினி

**முதன்மை ஆசிரியர்**
மு. தயாளன்
**உதவி ஆசிரியர்கள்**
வி.மைக்கல் கொலின், செல்வி த. சரண்யா, திருமதி சாரு தயாளன்
**ஒப்பு நோக்காளர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு தயாளன்
**ஆலோசகர்கள்**
Dr P.இராஜையா, பேராசிரியர் செ.யோகராசா



**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK** sirukathai1@gmail.com, +447505455811
**Sirukathaimanjari 91, Barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649


**சந்தா விபரம்:**
**Srilanka:**900Rs/Year
Bank detail : Mrs Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817
**England** £20/Year
**Den/Swiss/Ger:** 80Euro/year. | **Can/USA/Amer:** $120
Bank details: M. Natkunathayalan, Barclays, Sort code 20-37-15, A/C Number 60389307
IBAN : GB11BUKB20371560389307 SWIFTBIC BUKBGB22

**விநியோகம்:**
யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் , +94 773788795
மட்டக்களப்பு: வி. மைக்கல் கொலின் +94 774338878
திருகோணமலை: த. சரண்யா, +94765554649
வவுனியா பண்டாரவன்னியன் புத்தகசாலை +94772244616



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலை நோக்கி.....

"மக..., மக..., சீக்கிரம் வாங்க, வந்து இந்த கொடியில இருக்கிற உடுப்புகள எடுங்கோ மழ வரப்போகுது " என்று கொஞ்சம் சத்தமாகவே சொன்னால் இனாயா.

" சரிம்மா, சரி, சரி, சரி...., சத்தம் போடாதீங்க" என்று பதில் கொடுத்த வண்ணம் தான் படித்துக் கொண்டிருந்த புத்தகங்களை மூடி வைத்து விட்டு உள்ளேயிருந்து ஓடி வந்தாள் ஹயா.

வெளியே வந்தவள் வானத்தைப் பார்த்தாள். " பெரிய மழை ஒன்று பெய்யப்போகுது" என்றவள் கொடியில் இருந்த துணிமணிகள் அனைத்தையும் கையில் எடுத்து அணைத்துத் தாங்கியபடி உள்ளே வந்தவள், "தங்கச்சி, தெல்லாத்தையும் மடிச்சி வைங்க, எனக்கு ஒன் லைன் டெஸ்ட் ஈக்கி" என்றவள், தான் படிக்கும் இடத்தில் போய் அமர்ந்தாள்.

"சரி .... சரி, நீங்க ஒன் லைன் டெஸ்ட் முடிஞ்சி எனக்கும் கொஞ்சம் போன் தாங்கோ, எனக்கு கொஞ்சம் கேம் ஒன்று விளையாட" என்றாள் ஹஸ்னா.

"அதெல்லாம் ஏலா எனக்கு நிறையப் படிக்க ஈக்கி" என்று மறுத்து விட்டாள் ஹயா.

இல்ல தாத்தா, ஒரு விஷயம் பார்க்கத்தான். ஏண்ட ப்ரெண்ட் ஒரு விஷயம் சொன்னா. அத பார்க்கத்தான்.

"அதென்ன சொன்னா ஒங்கட ப்ரெண்ட்" என்று ஆவலோடு கேட்டார் தாயார் இனாயா.

அது வந்து உம்மா " இந்தியாவுல அழகான இளம் நடிகர் ஒருத்தர் தற்கொலை செஞ்சி கொண்டதாம். அது தான் உம்மா." என்றாள் ஹஸ்னா மிகவும் கவலையோடு.

"எனக்கும் செய்தி கேள்விப்பட்ட, அவருக்கு என்ன பிரச்சினையோ " என்று சத்தமிட்டுக் கொண்டே தம்பி ரலீன் வந்தான்.

இந்த சத்தம் கேட்டு படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் அவ்விடத்திற்கு வந்தாள் ஹயா.

"அய்யோ... அய்யோ... சரியான சத்தம் படிக்கவே ஏலா..." என்று சொல்லிக் கொண்டே அவ்விடம் வந்தவள் வழமை போல் தனது உரையைத் தொடங்கினாள் ஹயா.

" என்ன பிரச்சினை இருந்தாலும் தம்பி அதற்கு ஒரு தீர்வு என்று ஒன்று இருக்கும். சில சமயத்தில காலம் பிரச்சினைகளைத் தீர்த்து விடும்." பெரிய அனுபவசாலிகள் பேசும் தோரணையில் ஹயா பேசிக் கொண்டிருந்தாள்.

"உண்ம தான் புள்ள பொறுத்தார் பூமி ஆள்வார்" என்று அந்தக் காலத்துல சும்மாவா சொன்னாங்க "என்றாள் தாயார்.

ஹயா தனது தம்பி தங்கச்சிக்கு தான் கற்றவற்ற வாழ்க்கை பாட விடயங்களை பரிமாற இது தான் சிறந்த சந்தர்ப்பம் என நினைத்தவள் தொடர்ந்தாள்.

"தம்பி, தங்கச்சி" என்று இருவரையும்



விழித்தாள். "வாழ்க்கை அழகானது. அத வாழ கற்றுக்கொள்ள வேண்டும். வாழ்க்கை அர்த்தமுள்ளது அதில் ஒவ்வொரு நிமிஷமும் அருள் நிறைந்தது. அந்த அருளைப் பெற்றுக் கொள்ள கற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு முழு நம்பிக்கையுடன் முயற்சி செய்ய வேண்டும். அப்ப தான் வாழ்க்கையில எங்களுக்கு வெற்றி பெற ஏலும்."

ஹயாவினது முதிர்ச்சியை நினைத்து அவளது தாயார் இனாயா மனம் மகிழ்ந்தார். தந்தை இல்லாவிட்டாலும் தான் கூலி வேலைகளைச் செய்து கொண்டு கடைகளுக்கு சாப்பாடும் செய்து விற்று சீவியம் செய்து ஒரு நல்ல தாயாக மகளுக்கு இருப்பதோடு பாடசாலையில் தன் மகளுக்கு சிறந்த ஆசிரியர்கள் கிடைத்து இருப்பதுவும் மகளின் ஆளுமை, கல்வி, பண்பு, குணங்களில் சிறந்த மாற்றம் இருப்பதை உணர்ந்தாள் அந்தத் தாய். இறைவனைப் புகழ்ந்து கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்ம தான் புள்ள... எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு இருக்குது. அல்லாஹ்விடம் முறையிட்டு மன்றாடி நம் மன பாரத்த குறைச்சிக்கனும். அப்ப மனம் நிம்மதியா இருக்க ஏலும்." என்று மேலே ஓட்டைக் கூறையை அண்ணார்ந்து பார்த்தவாறு தனது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தினார் தாயார் இனாயா.

"உம்மா கவலபடாதீங்க, நான் நல்லா படிச்சி ஒரு டொக்டரா வருவன். ஒங்கட கஷ்டத்தயெல்லாம் போக்குவன். இது என்னால முடியும் உம்மா. எனக்கு நம்பிக்கை இருக்கு." என்றாள் ஹயா.

"தங்கச்சி, தம்பி,..." என்று மூச்சொன்றை இழுத்து விட்டாள். பின்னர் மீண்டும் அவள் தொடங்கினாள். " இறைவன் எங்களை அழகாக படைச்சி இருக்கான். இந்த வாழ்க்கைய நாங்க அழகா வாழனும். மறுமையில் எல்லாத்துக்கும் கேள்வி கணக்கு ஈக்கி. மத்தவங்களுக்கு எப்பவுமே தொந்தரவு இல்லாம வாழனும். பிறருக்கு உதவனும். சில நேரங்கள்ல மத்தவங்களுக்கு உதவாட்டியும் பரவாயில்ல. குறைஞ்சது உபத்திரவம் செய்யாமலாவது இருக்கோணும்.

அப்ப தான் அது உண்மையிலயே சந்தோஷமான வாழ்க்கை. பணம் வரும் போகும். ஆனா நல்ல குணம் இருக்கோணும். அவங்களுக்கு என்ன ஈக்கி, இவங்களுக்கு என்ன ஈக்கி எங்களுக்கு என்ன இல்ல எண்டு பாத்து பாத்து குறைகளை தேடாம, இருக்கிறத வைச்சி திருப்தியா சந்தோஷமா இருக்கப் பழகிக் கொள்ளனும்." என்றாள் ஹயா.

வீட்டிற்கு வெளியே மழை பெய்தாலும் அதன் அடையாளங்கள் வீட்டுக்குள்ளும் பல இடங்களில் தெரிந்தன. ஹஸ்னா சில பாத்திரங்களில் சாமான் சுற்றி வந்த பழைய செய்தித் தாள்களை நனைத்து வைத்து கூரையில் இருந்து ஓட்டை வழியாக விழும் நீர் விழும் பல இடங்களில் பாத்திரங்களை சரி செய்து வைத்தாள். ரலீனும் இதற்கு உதவியாக இருந்தான்.

ஆம்! ஹஸ்னா, ரலீன் இருவரும் சிறியவர்கள். வறியவர்களும் கூட. அதனால் தானோ வாழ்க்கையின் கசப்பை மிகவும் இனிப்பாக ஏற்று வாழப்பழகிக் கொள்கிறார்கள்.

இனாயாவின் கண்களில் இருந்து நீர் வடிந்து ஓடியது. இதனை பிள்ளைகளுக்கு காட்டிக் கொள்ளாமல் துடைத்துக் கொண்டாள். கூரையில் இருந்து வீட்டிற்குள் வழியும் நீரை நினைத்து தன் ஏழ்மை நிலையை நினைத்து இனாயாவின் கண்களில் இருந்து கண்ணீர் சிந்தியதா இல்லை தன் சிறிய பிள்ளைகள் ஹஸ்னா, ரலீன் ஆகிய இருவரும் சோகங்களைத் தாங்கிக் கொண்டு வாழும் மனப்பக்குவத்தின் வலிமை கண்டு வடிந்த ஆனந்தக் கண்ணீரா?


ஹயா பெருமூச்சொன்றை இழுத்து விட்டவாறு, தனது இலட்சியத்தை நனவாக்கவென தன் கல்வி விடயங்களில் ஈடுபட்டாள். அவளைத் தொடர்ந்து ஹயாவும் ரலீனும் அவளைப் பின் தொடர்ந்தார்கள்.

விடியலை நோக்கி ஒரு எதிர்பார்ப்புடன் அந்த குடும்பத்தின் நடவடிக்கைகள் நகர்ந்து செல்கின்றது.

◇◇◇

# மரணம்

பயம் பெரிதாயிற்று. விலக்க விலக்க வேகமாகப் பற்றிக் கொண்டது. உட்கார முடியவில்லை. வேண்டாம் என்று உதறி எழுந்துவிடலாமா? மனம் பின்னடைந்தது. இல்லை: விடமாட்டேன். என்ன என்று



தெரியாமல் விலக மாட்டேன். இறந்துபோவது என்றால் என்ன? இறந்து போதென்றால் நீட்டிப்படுக்க வேண்டும். அவன் சட்டென்று கால் நீட்டிப் படுத்துக் கொண்டான். உடம்பை விறைப்பாக்கினான். இப்போது உடம்பு செத்துவிட்டது. இந்த உடம்புக்கு மரணம் வந்துவிட்டது. நான் இறந்துவிட்டேன். கொண்டுபோய் தகனம் செய்யப் போகிறார்கள். அண்ணாதான் மறு படியும் நெருப்புச் சட்டி தூக்கிக் கொண்டு போகவேண்டும்.

ஆடிஆடித் தூக்கிக் கொண்டு போய் சுடு காட்டில் வைத்து விறகு அடுக்கி கொளுத்திவிடுவார்கள். இந்த உடம்பு மெல்ல மெல்ல நெருப்புப்பட்டு சாம்பலாகி விடும். ஒன்றுமே இருக்காது. உடம்பு காணாமல் போய்விடும். எது இருப்பதால் நான் இருக்கிறேனா? எது இருப்பதால் நான் படுத்திருக்கிறேன்.?எது இல்லாது போனால் நான் இறந்துவிடுவேன்?

வேங்கடராமன் (ரமண மகரிஷி) உற்று ஆழ்ந்து எது இருக்கிறது என்று பார்த்தான்.அவனது மூச்சில் மாறுதல் ஏற்பட்டது. மனம் அடங்க மூச்சும் அடங்கும்.மூக்கில் இருந்து ஓரடி தூரம் வெளிவருகிற காற்று மெல்லச் சுருங்கிற்று. உள்ளுக்குள் ஆழ்ந்து எது இருக்கிறது என்று பார்க்க மூச்சுவிடுவது மூக்கின் எல்லைவரை இருந்தது. இன்னும் ஆழ்ந்து எது இருக்கிறது எதை இழந்தால் மரணம் என்று உற்றுப் பார்க்க மூச்சானது மேல் மூக்குவரை நின்றது. இதுதான் மரணமோ?

**பாலகுமாரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூக்களின் வண்ணங்கள்

சந்தோஷ் விளையாடவும் பிடிக்காமல் படிக்கவும் பிடிக்காமல் வீட்டின் பின்புறத்தே அமர்ந்திருந்தான். இலைகளையும், தளிர்களையும் மெல்லெனத் தழுவிச் செல்லும் இளங்காற்றின் தழுவலை அனுபவிக்க முடியாமல் அந்தப் பதின்ம வயதுச் சிறுவன் துவண்டு போயிருந்தான். தன்னுடைய எண்ணங்களையோ, விருப்பங்களையோ சொல்லத் தெரியாத வயது. அப்பாவின் கோப முகமே கண்ணுக்குள் நின்றது. அம்மாவிடம் பேசலாம் என்றால் எப்படிச் சொல்வதென்று தெரியவில்லை. எப்போதுமே அவனுக்கு அப்பாவிடம் பயம் அதிகம். கோப வார்த்தைகளின் சொந்தக்காரர் அவர். தோழமையுடன் ஒருநாளும் அவர் பேசியது கிடையாது. அவர் பேசுவதே நல்லாய்ப் படி. படித்து ஒரு டொக்டராய் வந்துவிட வேணும். பெரியப்பாவின் மகன் கவினைப் பார். டொக்டருக்கு படிக்கின்றான். நான் டொக்டராய் வர வேணுமென்று எவ்வளவோ ஆசைப்பட்டன். இந்த தரப்படுத்தல் முறையால் என்னால் படிக்க முடியாமல் போய்விட்டது. அதோடு போர்ச்சூழலால் இடம் பெயர்ந்து அங்குமிங்குமாய்த் திரிந்து படிக்க முடியாமல் போய் என்னுடைய ஆசை நிறைவேறாமல் போய் விட்டது. நீதான் நிறைவேறாத என் ஆசையை நிறைவேற்ற வேண்டும்.

அவன் படிப்பில் சாதாரணமான மாணவனாகவே இருந்தான். என்னை ஒரு வைத்தியராக்க வேண்டுமென்ற தீவிரமான அப்பாவின் ஆசையை நான் எப்படி நிறைவேற்றப் போகிறேன்? எனக்குக் காயம், இரத்தம் என்றாலே ஒரே பயமாக இருக்கே. நடுநடுங்கிப் போகிறேனே! அப்பா அவனிடம் பேசுவதே நீ நன்றாகப் படித்து ஒரு வைத்தியராகி எங்களுக்கு நோய் வரும் போது எங்களுக்கு வைத்தியம் பார்க்க வேண்டும். அதுதான் எங்கள் ஒரேயொரு ஆசை. எவ்வளவும் பாடுபட என்னால் முடியும். நீ படித்தால் மட்டும் போதும். அவர் சொல்லும் போதெல்லாம் சந்தோஷ்க்கு பயம் வந்து ஒட்டிக் கொள்ளும். எங்கே அவரின் ஆசையை நான் நிறைவேற்ற முடியாமல் போய்விடுமோ? ஏன் நிச்சயம் நிறைவேற்ற முடியாது.

அப்போது அப்பா கோபப்படுவார், கவலைப்படுவார். எல்லாவற்றுக்கும் நான் காரணமாகிவிடுவேன். குற்றஉணர்ச்சி அவனை அலைக்கழிக்கும். எனக்குத் தான் அது விருப்பமில்லையே. வைத்தியசாலை மணமே எனக்குப் பிடிக்காதே. இரத்தத்தைக் கண்டாலே மூச்சே நிற்பது போலிருக்குமே என நினைப்பானே தவிர வெளியில் சொல்ல மாட்டான். எல்லாவற்றுக்கும் ஒரு பயம், தயக்கம். அவனுக்கு சைக்கிள் பழகவே பயமாக இருக்கும். அவனது தங்கை பயமின்றி சைக்கிள் ஓட்டுவாள். சைக்கிள் பழகும்போது விழுந்து விட்டால் அடிபடுமே என்று சைக்கிளைத் தொடவே பயப்படுவான். அவனது தங்கை அண்ணாவைப் பார்த்து பயந்தாங்கோழி என்று கேலி செய்வாள். பயத்துக்குள்



நுழைந்து காரியம் செய்தால் பயம் போகுமென்று சந்தோஷ் ஒரு புத்தகத்தில் படித்திருந்தான். ஆனால் எப்படி பயப்படாமல் செய்ய முடியுமென்பது மட்டும் அவனுக்கு புரியவேயில்லை.

அம்மா எப்போதும் சொல்லுவார் குழந்தை எழும்பி நடந்தால் விழுந்துவிடுவேனோ என்று பயந்து நடக்கப் பழகாமல் இருந்தால் நடக்க முடியுமா? விழுந்தால் தப்பில்லை. விழுந்து விழுந்துதான் பழகவேணும். பயப்படாமல் சைக்கிள் பழகு என்பார். கேட்கும்போது அவனுக்கு அது சரியாக இருக்கும். ஆனால் சைக்கிளைத் தொட்டவுடன் பயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிவந்து ஒட்டிக் கொள்ளும். எங்கிருந்துதான் இந்தப் பயம் வருகிறதோ என்று நொந்து கொள்வான். இதற்கே பயப்படுகிறேனே. நான் எப்படி ஒரு வைத்தியராக முடியும் என்று நினைத்து துவண்டு போவான். அவனிடமிருந்து பயத்தைக் களைவது மணலில் கயிறு திரிப்பது போல் கடினமாகவே இருந்தது. பயம் மட்டுமில்லாமல் படிக்கவும் சிரமப்பட்டான்.

வளர வளர அப்பாவின் ஆசையை நிறைவேற்றத் தன்னால் முடியாது என்ற எண்ணம் அவனை இன்னும் சுயபச்சாதாபத்துள் மூழ்கடித்தது. அவனுக்கு வரைவதில் மிகவும் ஈடுபாடு இருந்தது. பயம் வரும் நேரங்களிலோ அல்லது தன்னம்பிக்கை குறையும் நேரங்களிலோ தன் அறையில் உட்கார்ந்து வரைவான். கண்ணில் பார்ப்பவற்றை யெல்லாம் தாளில் கொண்டு வர முடிந்த அவனால், படிப்பதை ஞாபகத்தில் வைத்து எழுத சிரமமாகவே இருந்தது. அவன் வரையும் வரைபடங்களை யாரும் பார்த்ததுமில்லை. பாராட்டினதுமில்லை. அவன் வரைவதைப் பார்த்தாலே அவனது அப்பாவுக்கு கோபம் வந்துவிடும். வீணாகக் கிறுக்கிக் கொண்டு இராது படி என்று கத்துவார். வரைந்த தாளைப் பார்க்காமலேயே கிழித்து எறிந்து விடுவார். குஞ்சுக்கு உணவூட்டும் தாய்ப் பறவையும், புள்ளிகளைத் தன் உடலில் தாங்கி மிரட்சியைக் கண்களில் தேக்கி ஓடும் மானும், நீரோடைகளில் கூட்டம் கூட்டமாய் குளிக்கும் யானைகளும், குட்டிகளும் அவர் கைகளில் சிக்கி உருத் தெரியாமல் போய்விடும். தன் ஓவியம் சிதைந்த வருத்தத்தில் கண்களில் நீர் முட்டப் பயத்துடன் புத்தகத்தை கையில் எடுப்பான். ஆனால் எதுவுமே மூளையில் பதிவதில்லை. அழுகை வரும். அழுதால் தங்கை கேலி பண்ணுவாள் என்று நினைத்து அடக்கி கொள்ளுவான். இருட்டில் போய் உட்கார்ந்து வானில் மின்னும் நட்சத்திரங்களில் கரைந்து போவான்.

அம்மா ஆதரவுடன் பேசினாலும் அப்பா நீ டொக்ராகி விடுவாய் என்ற நம்பிக்கையில் இருக்கிறார். அவருடைய நம்பிக்கையை கலைச்சிடாதையடா. கொஞ்சம் கவனமெடுத்துப் படி ராசா தலையைத் தடவி அன்பாக அவ்வப்போது அப்பாவுக்காய் சொல்லும்போது சீ நான் ஏன் இப்படி மொக்காய் பிறந்திருக்கிறேன் நொந்து கொள்வான். எப்படியும் நல்லாய் படிக்க வேணுமென்று இரண்டு நாள் புத்தகமும் கையுமாய் இருப்பான். ஆனால் மூன்றாம் நாளே என்னால் முடியலையே என்று புத்தகத்தை மூடி வைத்துவிடுவான். உற்சாகம் கடலலைபோல் திரும்பவும் போய் மறைந்து விடும்.

அந்தநேரத்தில் அவனது பாடசாலையில் விழா ஒன்று நடந்தபோது வீட்டிலிருந்து எல்லோருமே போயிருந்தார்கள். மாணவர்களை ஊக்குவிப்பதற்காக அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வந்திருந்தார்கள். மாணவர்களின் கைவினைப் பொருட்கள், ஓவியங்கள், எழுத்து ஆக்கங்கள், கவிதைகள் என்று யாவுமே எல்லோரையும் கவர்ந்தன. சந்தோசும் தான் வரைந்த ஓவியங்களை ஆசிரியரிடம் காண்பித்திருந்தான். அவனது ஓவியங்கள் பல அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததில் அவனுக்கு நெஞ்சுகொள்ளா பெருமையாக இருந்தது. ஆனால் அப்பா பார்த்தால் என்ன சொல்லுவாரோ என்ற பயம் அவன் மகிழ்ச்சியைத் துரத்தியடித்தது.

அப்பா, அம்மா என்று குடும்பமே அன்று விழாவிற்கு வந்திருந்தனர். சந்தோஷின் ஆசிரியர் அவனின் தந்தையை அழைத்து உங்களிடம் கொஞ்சம் பேச வேணடும் என்று கூட்டிச் சென்றார். மகன் படிப்பில் குறைவாக இருப்பது பற்றி புகார் சொல்லப் போவதாக அவர் நினைத்தார். உங்கள் மகனின் திறமையை நீங்கள் ஊக்குவிக்க வேண்டும். ஓவியம் வரைவதில் வல்லவனாக இருக்கிறான். ஆனால் அவனது ஓவியங்களில் நெஞ்சைப் பிழியும் சோகரசமே காணப்படுகிறது. விசாரித்ததில் அவன் வரைவது வீட்டில் யாருக்குமே பிடிக்காது என்றும் வைத்தியராக வர வேண்டும் என்பதே உங்கள் நோக்கம் என்று கூறினான். வாருங்கள் அவனது ஓவியங்களைப் பாருங்கள். பிரமிப்பாக இருக்கும். இந்தச் சின்ன வயதில் அவனது திறமையைப் பாருங்கள். இன்னும் அவனுக்கு ஓவியத்தில் முறையாக பயிற்றுவித்தால் பெரிய ஓவியக் கலைஞன் ஆகிவிடுவான். ஒரு கலைஞனை முளையிலேயே கிள்ளி விடாதீர்கள். அவன் என்னவாக வரவேண்டும் என்பதை அவனிடமே விட்டுவிடுங்கள். மயிலைப் பாடவும், குயிலை ஆடவும் பண்ண முயற்சிக்காதீர்கள். அவர்களை அவர்கள் வண்ணத்திலேயே மலர விடுங்கள். உங்கள் ஆசைகளை அவர்களிடம் திணிக்காதீர்கள். பிள்ளைகளை நீங்கள் உருவாக்கவில்லை. அவர்கள் உங்கள் மூலம் வந்திருக்கிறார்கள். அவ்வளவுதான். ஒரு உலகம் கல்வியறிவில் சிறந்தவர்களால் மட்டும் அழகாக்கப்படுவதில்லை. கலைஞர்கள், ஓவியர்கள், சிற்பிகள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் எனப் பலதரப்பட்டோராலும் தான் வண்ணமயமாக்கப்படுகிறது. வெறும் வைத்தியர்களும், கட்டடக் கலைஞர்களும், பொறியியலாளர்களும், உலகை உயிரோட்டமாக்கி விடமாட்டார்கள். கலைகளும், கலைஞர்களும் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு தேவையானவர்கள். ஆசிரியர் கூறவும் உண்மை பொட்டில் அடித்தது போல் உறைக்க மகனைத் திரும்பிப் பார்த்தார். கண்களில் ஆயிரம் கனவுகளுடன் ஏக்கத்துடன் நிற்கும் மகனை வாரி அணைத்துக் கொண்டார்.

**கமலினி கதிர்** - சுவிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நிகழ்வை திறம்பட நடத்த வேண்டும் என்று அதிபர் ஒருமாதத்திற்கு முன்னரே முடிவெடுத்துப் பாடசாலையில் ஆசிரியர் கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தார். அதில் ஐந்து ஆசிரியர்களும் அதிபரும் கலந்து கொண்டு நிகழ்வைத் திட்டமிடுதல் பற்றிக் கலந்துரையாடிக் கொண்டிருந்தார்கள்.

'அந்தக் கோட்டத்தின் ஏனைய பாடசாலை அதிபர்களை அழைக்க வேண்டும். பிரதம விருந்தினராக பெரிய ஒரு ஆளை ஒழுங்கு பண்ணவேண்டும். சிறப்பு விருந்தினராக இந்தப்பாடசாலையின் பழைய மாணவர்கள் மூன்று பேரையும் தெரிவுசெய்து கூப்பிடுவம், ஆசிரியைகள் ஒரேமாதிரி சாறிகட்ட வேண்டும். தானும் புதிய ஆடை அணிந்து வந்து எல்லாவற்றையும் சிறப்பாகச் செய்து மாணவர்களையும் பெற்றோர்களையும் கவர்ந்து பேரெடுக்க வேண்டும்' என்ற எண்ணத்தை அதிபர் முன்வைத்தார்.

ஆசிரியர்களுக்கும் தங்கள் பாடசாலை நிகழ்வைச் சிறப்பாகச் செய்து முடிக்கவேண்டும் என்ற ஆவலில் அதற்கு உடன்பட்டுவிட்டார்கள். மற்றைய விடயங்கள் எல்லாவற்றையும் விட நிதியும், பிரதம விருந்தினரை ஒழுங்கு பண்ணுவதுமே பெரும் பிரச்சனையாக இருந்தது. நிதிக்காக யாழ்ப்பாணத்தின் ஒரு தொழிலதிபரை அயற்பாடசாலை அதிபர் ஒருவர் சிபார்சு செய்திருந்தார். 'நீங்கள் அவரிடம் போய் ஒருமாதிரி வளைந்து நெளிந்து அநுதாபத்தைப் பெறுவது மாதிரிக் காண்பித்து பிரதம விருந்தினராக வருமாறு கேளுங்கள். அவர் வருவதற்கு பெரிதாக உடன்பட மாட்டார். ஏதாவது உதவி செய்கிறேன் என்பார். அதைப் பயன்படுத்தி நிதியைக் கேளுங்கள்' என ஆலோசனை வழங்கினார்.

அதன்படி அதிபர் இரண்டு ஆசிரியர்களையும்



இருக்கிறார், கொஞ்ச நேரத்தில் உங்களைக் கூப்பிடுவதாகக் கூறியுள்ளார்' என்று கூறிவிட்டுத் தன் வேலையில் மூழ்கி

# செயற்பட்டு மகிழ்வோம்

அழைத்துக்கொண்டு அவரின் தொழில் ஸ்தாபனத்திற்குச் சென்றார். அங்கிருந்த தொழிலாளி இவர்களை உள்ளே விடவில்லை. இவர்கள், தாம் பாடசாலையொன்றிலிருந்து வந்த அதிபரும், ஆசிரியர்களுமே என்றும், தங்கள் பாடசாலையின் விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக அழைப்பதற்காக முதலாளியை காண வந்துள்ளோம் என்றும் விளக்கினார்கள்.

அதன் பின்புதான் அந்த வேலையாள் இவர்களை இருத்திவிட்டு உள்ளே போய் முதலாளியுடன் கதைத்து வருவதாகக் கூறி உள்ளே சென்றான், சென்றவன் ஒரு அரை மணிநேரத்தின்பின் வந்து 'முதலாளி கொஞ்சம் வேலையாக

விட்டான்.

ஒரு மணிநேரத்தின் பின்பே ஒருவன் வந்து 'முதலாளி வரட்டாம்' என்று கூறி அழைத்துச்சென்றான். மூவரையும் அமரச்சொல்லி சைகை காட்டிய முதலாளி 'நீங்கள் வந்த விஷயத்தை சொல்லுங்கள்' என்று பேச்சை ஆரம்பித்தார். அதிபரும் பாடசாலையின் பெயரைச் சொல்லி தான் அதன் அதிபர் என்றும் உங்களைப் பிரதம விருந்தினராக அழைக்கவே வந்துள்ளேன் என்றும் கூறினார், அவர் எப்போது என்று கேட்டார். அதற்கு அதிபர் 'மார்ச் மாதம் 5ம் திகதி சனிக்கிழமை' என்றதும் அவரோ, தான் அன்று கொழும்பு போவதாகக்கூறி, 'நீங்கள் மூவரும் மினக்கெட்டு என்னட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திட்டீங்கள் ஏதாவது உதவி வேணுமெண்டால் கேளுங்கோ' என்றார்.

கூடவந்த ஆசிரியர்களுள் ஒருவரான திருமதி ராஜி எழுந்து ஐயா, எங்கட பாடசாலை ஒரு ஏழைப்பிள்ளைகள் படிக்கும் பாடசாலை. அவர்களின் பெற்றோரிடம் நாங்கள் எந்தவொரு நிதியையும் எதிர்பார்க்க முடியாது. பழைய மாணவர்களும் பெரிய பதவிகளில் இல்லை. எங்கட பாடசாலையில் இதுவரை பெரிதாக நிகழ்வுகள் எதுவும் நடந்ததாகவும் நாங்கள் அறியவில்லை. எங்கள் அதிபரோ சிறப்பாக நிகழ்வை நடத்தி பிள்ளைகளையும் பெற்றோர்களையும் பங்குபெற வைக்கவேண்டும் என நினைக்கின்றார். அதாலை உங்களாலை முடிந்த நிதியை எங்களுக்குத் தந்தால் பெரிய உதவியாக இருக்கும் எனக்கூறி குழைந்து நின்றார். முதலாளியும் சரி நான் ஒரு ஐம்பதாயிரம் தருகின்றேன். நாளைக்கு பின்னேரம் நாலு மணிக்கு வந்து வாங்குங்கோ என்று சொல்லி இவர்களை அனுப்பி வைத்தார். அதிபரும் தங்களுக்கு இந்த ஐடியாவைச் சொன்ன ஆசிரியரை மனதில் வாழ்த்தி மனநிறைவுடன் திரும்பினார்.

அடுத்தநாள் அதிபரும் ஆசிரியர்களும் ஒன்றுகூடி செலவு மதிப்பீடு ஒன்றைப் போட்டார்கள். எப்படியும் ஒருலட்சம் ரூபாய் இருந்தால் காணும் சேர், நாங்கள் சிறப்பாக நடத்தி முடித்து விடலாம் என்கிறார் ராஜி ரீச்சர்.

ஐம்பதாயிரம் அந்த முதலாளி தாறார். மிகுதி ஐம்பதாயிரத்தை நாங்கள்தான் ஏதாவதொரு வழியில் சேர்க்க வேண்டும் என்றார் அதிபர். இந்த ஊரிலை இருக்கிற கொழும்பு வியாபாரிகளிட்டையும் கடை வைத்திருப்பவர்களிடமும் கேட்டுப் பார்க்கலாம்; என்றார் ராஜி ரீச்சர். அவர்களின் பிள்ளைகள் இந்தப் பாடசாலைக்கு வருவதில்லை. அயலிலுள்ள பாடசாலைக்குத்தான் போகிறார்கள். இதாலை அவர்கள் எங்களுக்கு எப்படி நிதி தருவார்கள்; என்கிறார் சுகுணா ரீச்சர். அது சரிதான், ஆனால் நான் ஒருக்கால் முயன்று பார்க்கின்றேன்; என்கிறார் ராஜி ரீச்சர். அதிபரும் ராஜி ரீச்சரிடம் அந்தப் பொறுப்பை விட்டுவிட்டார்.

சுகுணா ரீச்சரும் தன்பங்கிற்கு ஒரு யோசனை சொல்கின்றார். இப்படியான நிகழ்வுகளுக்கு ஐஸ்கிறீம் வானை அழைத்தால் அவர்களும் எங்களுக்கு ஏதாவது தருவார்கள். நான் அதனைப் பொறுப்பெடுக்கின்றேன். எனக்குத் தெரிந்த ஐஸ்கிறீம் வான்காறன் ஒருத்தன் இருக்கிறான். நாளைக்கு வரும்போது கேட்டுக்கொண்டு வாறன்; என்றார். அதிபரும் மகிழ்வுடன் தலையசைத்து சம்மதத்தை தெரிவித்தார்.

அடுத்து பிரதம விருந்தினராக யாரை அழைப்பது என்ற அதிபரின் கேள்விக்கு கமலா ரீச்சரோ எனது உறவினர் ஒருவர் வைத்தியராக இருக்கின்றார், அவரை ஒருக்கால் கேட்டுப் பார்ப்பம்; என்கிறார். எதற்கும் ஒருவரிலை மட்டும் நம்பிக்கை வைக்காமல் ஒரு நாலு ஐந்து பெயரைத் தெரிவு செய்வம். யாராவது ஒருவர் சம்மதிப்பார்தானே; இது ராஜி ரீச்சர். இதன்படி அந்த ஊரிலுள்ள பெரிய மனிதர்கள் ஐவரின் பெயர்களைக் குறித்துக் கொள்கின்றனர். இவர்களிடம் அதிபரும் ராஜிரீச்சரும், சுகுணா ரீச்சரும் சென்று கதைப்பது என முடிவெடுத்தார்கள். இதன்படி அடுத்தநாள் பின்னேரமளவில் அதிபரும் இரண்டு ஆசிரியைகளுமாக ஒவ்வொரு வீடாக ஏறி இறங்கியும் ஏமாற்றம்தான் மிஞ்சியது. ஐவருமே ஏதாவது ஒரு காரணத்தைக்கூறி மறுத்துவிட்டார்கள். அதிபருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. குழம்பிப் போய், கடைசியாக வலயக் கல்விப் பணிப்பாளரை ஒருக்கால் கேட்டுப் பார்ப்பம்; என்று முடிவெடுத்தார்.

வலயக் கல்விப் பணிப்பாளருக்கு இவ் அதிபரைப் பெரிதாகப் பிடிப்பதில்லை. இந்த அதிபரிட்டை பாடசாலையைக் கொடுத்து இரண்டு வருடமாகிவிட்டது. எந்த ஒரு முன்னேற்றத்தையும் காணவில்லை என்பது அவர் பக்க ஆதங்கம். அதிபரும் ஒரு மாதிரி தயங்கித் தயங்கிச் சென்று வலயக் கல்விப் பணிப்பாளரைச் சந்தித்து மெதுவாகத் தனது கோரிக்கையை முன்வைத்தார். வலயக் கல்விப் பணிப்பாளருக்கு வந்தது கோபம், நீர் இன்னும் விளையாட்டுப் போட்டியை நடத்தாமல் என்ன செய்கின்றீர்? எல்லாப் பள்ளிக்கூடங்களும் பெப்ரவரியிலே நடத்தி முடித்திட்டாங்கள். நீர் என்ன மார்ச் மாதம் வைக்கிறீர்? என்றார் சத்தமாக.

"இல்லை சேர், எங்களுக்கு நிதி இல்லை. அதை சேர்க்க வேண்டும். விருந்தினரை வரவேற்கப் பாண்ட் வாத்தியம் வேண்டும், பாண்ட் எங்களிடம் இல்லை. பக்கத்துப் பாடசாலையில்தான் கேட்டம். அவர்கள் தங்களுடைய போட்டிகள் முடியத்தான் தருவம் எண்டிட்டாங்கள். அதற்குப் பிறகுதான் வாங்கி நாங்கள் பழக்கிறம்" தயங்கித் தயங்கி தன்பக்க நியாயங்களைக் கூறி நிமிர்ந்தார்.

"எனக்கு அன்றைக்கு நேரமில்லை. ஆரம்பப் பாடசாலைதானே. நீர் ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளரைக் கேளும். நானும் சொல்லிறன்." மனதில் புயல்வீச வீடு நோக்கிச் சென்றார் அதிபர். வீதியில் வரும் வாகனங்கள் தன்னோடு மோதவருவது போன்ற பிரமை. அடுத்தநாள் ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி சுந்தரியுடன் கதைத்துத் தனது பரிதாப நிலையைக் கூறி அவரிடம் சம்மதம் வாங்கினார்.

ராஜிரீச்சரும் காசு சேர்க்கப் போனபோது அவர்கள் பாட சாலையை விமர்சித்தார்கள். இதை நடத்துவதைவிட மூடி விடலாமே போன்ற கருத்துக்களையெல்லாம் அவர்களிடம் இருந்து கேட்க வேண்டி இருந்தது. ஆனாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் ஒவ்வொருவருடனும் தயவாகப் பேசி ஒரு நாற்பதாயிரம் சேர்த்து விட்டது பெரிய சாதனையாகப் பட்டது அவருக்கு. சுகுணா ரீச்சரும் ஐஸ்கிறீம் வான்காரனிடம் சென்று கதைத்தபோது அவன் மாணவர் தொகையைக் கேட்டுவிட்டுச் சிரிக்கத் தொடங்கி விட்டான். உங்கடை பள்ளிக்கூட நிகழ்விற்கு வந்தால் ஐயாயிரம் வியாபாரம் நடக்குமோ தெரியாது. அதிலை உங்களுக்கு எவ்வளவு தாறது. சுகுணா டீச்சரின் கெஞ்சலுக்காக அவன் வந்து வியாபாரம் செய்கிறேன். ஒரு ஆயிரம் ரூபாய் தான் தருவேன்; என்கிறான். சரி ஆயிரமாவது வரட்டும்; என்ற நோக்கில் ஒப்புக் கொண்டார்.

செயற்பட்டு மகிழ்வோம்; விளையாட்டு நிகழ்வு சரியாக இரண்டு மணிக்கு ஆரம்பமாகியது. அதிபர் றோஸ் கலரில் நல்ல ஒரு சேட்டும், கரும் மண்ணிற ரவுசரும் அணிந்து புதிய சப்பாத்து, ரையுடன் விளையாட்டுப் போட்டியை தலைமை தாங்கிக் நடத்தினார். அன்றைய நிகழ்வை நடத்த அவர்பட்ட கஸ்டங்களைச் சொல்லில் வடிக்க முடியாது. மாணவர்கள் போட்டி நிகழ்வுகளில் சந்தோசத்துடன் கலந்து கொண்டார்கள். அதிபரும் பெற்றோர் எல்லோரையும் கண்டிப்பாக அழைத்திருந்தார். இந்தப் பாடசாலையில் நீண்ட காலத்திற்குப்பின் நடைபெறும் ஒரு நிகழ்வு என்பதால் அவர்களும் வந்து போட்டிகளைப் பார்வையிட்டுக் கொண்டிருதார்கள். அயற் பாடசாலைகளின் அதிபர்களும், ஆசிரியர்களும் அதிபரின் வேண்டுகோளைத் தட்ட முடியாமல் வந்திருதார்கள். அதிபரும் ஒருவித மகிழ்ச்சியில் மிதந்து கொண்டிருக்கப் போட்டிகள் நடைபெற்றன. அந்தப் பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் என்ற சிறுவர் விளையாட்டுப் போட்டியின் போட்டி நிகழ்வுகள் நடைபெற்று முடிந்ததும் அறிவிப்பாளர் ஒலிவாங்கி முன் தோன்றினார். அடுத்து அதிபரின் தலைமையுரை இடம்பெறும். அறிவித்துவிட்டு மேடையின் ஓரமாக உள்ள கதிரையில் அமர்ந்து கொண்டார்.

அதிபர் ஒலிவாங்கிக்கு முன்னால் வந்து நின்று குரலை இருமிச் சரிபார்த்துக் கொண்டு தனது தலைமையுரையை ஆரம்பித்தார். பிரதம விருந்தினராக வந்திருக்கும் எமது வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுந்தரி நடேசன் அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் எமது பாடசாலையின் பழைய மாணவர்களான திரு வீரசிங்கம், திரு.சின்னக்குட்டி, திரு விநாசித்தம்பி ஆகியோர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, மாணவமணிகளே, பெற்றோர்களே, நடுவர்களே எல்லோருக்கும் எனது முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நேரம் ஏழு மணியைக் கடந்து ஓடிக்கொண்டிருந்தது. அந்தச்சிறிய மைதானத்தைச் சூழவுள்ள மரங்கள் இருள் சூழ்ந்ததனால் பசுமையிழந்து கறுப்பாகத் தெரிந்தன. சுற்றியுள்ள மரங்களோ அதிபரின் உரையில் மெய்மறந்து இலைகளைக்கூட அசைக்காமல் சிலைகளாய் நின்றன. அதிபர் ஆறு மணிக்குமுன் நிகழ்வுகளை முடித்துவிடலாம் என்ற எதிர்பார்ப்பில் போதியளவு மின்விளக்குகள் பொருத்த ஒழுங்குசெய்யாததால் மேடையும். அதன் முன்பக்கமும் தவிர்ந்த ஏனைய இடங்களில் இருள் சூழ்ந்துகொண்டது. அதிபர் கைகளை விசுக்கி ஆவேசமாக அரசியல்வாதி போல் உரையாற்றிக்கொண்டிருந்தார்.

பெரிய பாடசாலைகளை நிர்வகிப்பது, அதற்கு அதிபராக இருப்பது சுலபம். அங்கு படித்த பெற்றோர், வசதியான பெற்றோர், பாடசாலைக்கு உதவும் பெற்றோர் இருப்பார்கள். எல்லா வளங்களும் இருக்கும். இங்கு அப்படியில்லை. எல்லாமே நானும் ஆசிரியர்களும் தான் செய்ய வேண்டும். எங்கள் பாடசாலைக்கு என்றொரு பாண்ட் செற் இல்லை. இன்றுகூட பிரதமவிருந்தினரை வரவேற்க அயற்பாடசாலையில் இரவல் வாங்கித்தான் பழக்கினோம். ஒரு பேப்பரை அடித்து மாணவர்களுக்கு பயிற்சிகளை செய்விப்பதற்கு கூட போட்டோக்கொப்பி இயந்திரம் இல்லை. பெரிய பாடசாலை என்றால் அரசாங்கம் குடுக்காவிட்டாலும் பெற்றோரே வாங்கிக் கொடுத்து விடுவர். இங்கு மாணவரின் பெற்றோர் இடைவேளை நிகழ்விற்கு உடுப்புத் தைக்கவே வசதியற்றவர்கள். அவர்களால் போட்டோக்கொப்பி இயந்திரத்தை வாங்கித் தரமுடியுமா?; மாணவரைத் தரம் ஒன்றில் சேர்ப்பது, பெறுபேற்றைப் பெறுவது, ஒரு விழாவை நடத்த பிரதம விருந்தினரை ஒழுங்கு செய்வது, ஆசிரியரைப் பெறுவது எல்லாமே இங்கு மிகவும் கடினமான செயற்பாடுதான். இந்த விழாவிற்கு ஒரு பிரதம விருந்தினரை அழைக்க எவ்வளவு பாடுபட்டேன் என்று எனக்குத்தான் தெரியும். கடைசியில் எங்கள் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுந்தரிதான் கைகொடுத்தார். அவரை வாழ்நாளில் மறக்கமுடியாது. ஆனால் இவ்வளவு கஸ்டப்பட்டும் பெறுபேறு இல்லை, தரம் ஒன்று மாணவர் அனுமதி போதாது என்று அடிக்கடி ஏச்சுவாங்க வேண்டியிருக்கின்றது.

நான் இந்தப்பாடசாலைக்கு வந்து இரண்டு வருடங்கள் முடிந்து விட்டன. நான் வரும்போது 42 பிள்ளைகள் கல்வி பயின்றார்கள். ஆனால் தற்போது 44 ஆக அதிகரிக்க வைத்துள்ளேன். முன்னர் மூன்று ஆசிரியர்களே கல்வி கற்பித்தார்கள். தற்போது ஐந்து வகுப்பிற்கும் ஐந்து ஆசிரியர்களைப் போடுவித்துள்ளேன். பழைய மாணவர் சங்கத்தை அமைத்துள்ளேன். அவர்களையும் இங்கு அழைத்துள்ளேன். ஆனால் அவர்கள் பொருளாதார ரீதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்தங்கிய கூலித் தொழிலாளர்களாக உள்ளதால் அவர்களிடம் பாடசாலைக்குப் பொருளாதார உதவியை எதிர்பார்க்க முடியாது. அருகில் உள்ள இராணுவ முகாமில் கதைத்து மைதானத்தைச் சீர்செய்தேன். அவர்கள்தான் பிள்ளைகளுக்கு சிற்றண்டிகளையும் ஒழுங்குசெய்து தந்தார்கள். அவர்களுக்கும் எனது நன்றிகள். இன்று எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பத்தை வழங்கவும், மாணவர்கள் செயற்பட்டு மகிழவுமாக 52 போட்டிகளை ஒழுங்கு செய்தேன். இந்த நாள் அவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சி பொங்கும் நாளாக அமைய என்னால் முடிந்ததைச் செய்துள்ளேன். போட்டிகள் அதிகம் என்பதால் நேரம் கூடத் தேவைப்பட்டுவிட்டது. பிரதம விருந்தினராக வந்திருந்த பெண்மணியோ பொறுமை இழந்து கொண்டிருந்தார். அவரின் வீட்டிற்கு பாடசாலையிருந்து செல்வதற்கு அரைமணி நேரம் தேவை. இரவு எவ்வாறு தனியப் போவது? இப்பவே எட்டு மணியாகப் போகுது. சிறப்பு விருந்தினர் என்று மூவர் உள்ளனர். இனி எல்லோரும் உரையாற்றிப் பரிசு கொடுக்க ஒன்பது மணியாகிவிடும் போலிருக்கு. அதிபரும் உரையை முடிப்பதாய் இல்லை என்று குழப்பமடைந்தார்.

வேறு பாடசாலைகளிலிருந்து வந்து கலந்துகொண்ட அதிபர்மார்களும் அங்குமிங்கும் பார்த்துவிட்டு மெதுவாக நடையைக் கட்டினார்கள். சிறப்பு விருந்தினர் சின்னக்குட்டியோ கதிரையில் தலையைச் சாய்த்து அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தார். வாசலில் நின்ற ஐஸ்கிறீம் வான் இரண்டும் புறப்பட்டுச் சென்றுவிட்டான். மற்றொரு சிறப்பு விருந்தினரான விநாசித்தம்பியரோ மேய்சலுக்கு காணிக்குள் விட்ட கறவைமாட்டை வீட்டிற்குக் கொண்டு வந்து பால் கறக்கவேண்டும். நேரம் பிந்தினால் பால் வாங்குபவர்களுக்குக் கொடுக்க முடியாதே. என்ரை பிழைப்புப் போச்சே குழம்பிப்போய் புறுபுறுக்க தொடங்கினார்.

முன்வரிசையில் அமர்ந்து தூங்கிக் கொண்டிருந்த மாணவர் இருவர் நிலத்தில் படுத்து விட்டார்கள். பின்புறமிருந்த பெற்றோர் ஓடிவந்து தூக்கிக்கொண்டுபோய் மடியில் கிடத்திக்கொண்டார்கள். பெற்றோர் பக்கமிருந்து முணுமுணுப்புக் கேட்க ஆரம்பித் திருந்தது.

பிரதம விருந்தினர் திருமதி சுந்தரியின் சிந்தனைகள் எங்கோ சிறகடிக்கின்றது. அது ஒரு ஆரம்பப் பாடசாலை. பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கு அருகில் அமைந்துள்ளது. ஒருகாலத்தில் 150 வரையான மாணவர்கள் கல்வி கற்றுள்ளார்கள். தற்போது 44 மாணவர் கற்கும் பாடசாலையாகச் சுருங்கிவிட்டது. இப்பாடசாலையின் அதிபர்களாக இருந்தவர்களின் தலைமைத்துவம் மற்றும் ஆளுமைக் குறைபாடு இப்பாடசாலையை இந்த நிலைக்குக் கொண்டுவந்துவிட்டன. சிவலிங்கம் என்ற இந்த அதிபர் வந்து இரண்டு வருடங்கள் முடிந்து விட்டன. அவர் எவ்வளவுதான் முயற்சி எடுத்த போதிலும் பாடசாலையின் வளர்ச்சி என்பது முயற்கொம்பாகவே உள்ளது. அயலில் உள்ள ஆரம்பப் பாடசாலையில் சேர மாணவர்கள், இல்லை யில்லை பிள்ளைகளைச் சேர்க்க பெற்றோர் முண்டியடிக்கின்றார்கள். இப்பாடசாலையோ மூடுவிழாவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. அதிபர் எவ்வளவு முயற்சி எடுத்தாலும் ஆசிரியர்கள் வரவிரும்புவதில்லை. அதனால் நோய் நொடியுள்ள ஆசிரியர்கள், இணைப்புக்கோரும் ஆசிரியர்களின் இடைத்தங்கல் முகாமாகவும் உள்ளது. இங்கு பயிலும் மாணவர்களின் வறுமையான வீட்டுச்சூழல், மற்றும் படிப்பறிவு குறைந்த பெற்றோர போன்ற காரணங்களால் மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவதில்லை. இதனால் குறிப்பிடத்தக்க பெறுபேறுகளைப் பெற முடியாமலுள்ளது. பெற்றோர்களைக் கவர்வதற்காக இந்நிகழ்வை அதிபர் பெரிய எடுப்பில் செய்ய முற்பட்டது எட்டுமணி ஆகியும் நிகழ்வு நிறைவுபெறாத நிலைக்கு கொண்டு வந்து நிறுத்தியுள்ளது. பெண்ணாகிய நான் வீடுசெல்வதில் சிக்கலைக் கொண்டுவந்துள்ளது. இங்கு வருகை தந்துள்ள அதிபரில்ஒருவரைத் துணைக்கழைத்துத்தான் வீடுசெல்ல வேண்டும். ஆனால் வந்த அதிபர்மார்களும் மெதுவாக நழுவிக்கொண்டிருக்கிறார்கள். சரி ஏதோ ஒரு வழி பிறக்கும்தானே. அவர் தனக்குத்தானே நம்பிக்கையை ஊட்டிக் கொண்டார்.

அதிபரோ பிள்ளைகள் நித்திரை தூங்குவதையோ, பெற்றோர்கள் முணுமுணுப்பதையோ, இருட்டிவிட்டதையோ கண்டுகொள்ளாமல் தொடர்ந்து உரையாற்றிக் கொண்டிருந்தார். ஊர் மக்களுடன் கலந்துரையாடி அவர்களில் பழைய மாணவர் மூவரை இந்த மேடையில் சிறப்பு விருந்தினராக அமரச் செய்துள்ளேன். இந்நிகழ்வு பாடசாலையையும் சமூகத்தையும் இணைக்கும் படிக்கல்லாக அமையும் என்பது எனது நம்பிக்கை.

பொறுமையிழந்த பிரதம விருந்தினருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பேசாமல் எழுந்து போய் விடுவமா? என்று யோசித்தவர் கடைசி முயற்சியாக சிறப்பு விருந்தினராக அமர்ந்திருந்தவர்களுடன் பேச்சுக் கொடுத்தார். உங்களில் ஒரு ஆள் போய் அதிபரிடம் நேரம் போய்விட்டது. பிள்ளைகளும் நித்திரை தூங்கத் தொடங்கி விட்டனர். பரிசைக் கொடுத்து அனுப்புவோம் என்று சொல்லிப் பேச்சை நிறுத்துங்கள்; எனக் கேட்டதுதான் தாமதம் அவர்களில் ஒருவர் நானும் அதைத்தான் நினைத்தேன் என்று சொல்லிவிட்டு எழுந்துசென்று அதிபர் காதில் கிசுகிசுத்தார். உடனே அதிபர் மாணவர்கள் விளையாடிக் களைத்துவிட்டனர். நேரமும் சென்றுவிட்ட காரணத்தினால்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துடன் எனது பேச்சை முடித்துக்கொள்கின்றேன்; என்றவாறு பேச்சை முடித்து வந்து கதிரையில் அமர்ந்தார். சிறப்பு விருந்தினர்கள் தாங்கள் உரையாற்றவில்லை எனவும் பிரதம விருந்தினரைச் சம்பிரதாய பூர்வத்திற்கு சிறிய உரையொன்றை ஆற்றுமாறும் கோரினார்கள். அதிபரும் அதற்குச் சம்மத்தித்தார்.

தற்போது பிரதம விருந்தினர் உரையாற்றுவார். அறிவிப்பாளரின் குரலைக் கேட்டு பிரதம விருந்தினர் ஒலிபெருக்கி முன்னே சென்றார். அனைவருக்கும் வணக்கம். தற்போது எனது பேச்சைக் கேட்கும் நிலையில் யாரும் இல்லை. போட்டியில் கலந்துகொண்ட மாணவர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள். என்னை அழைத்துக் கௌரவித்தமைக்கு அனைவருக்கும் நன்றிகள்; என்று கூறி ஆசனத்தில் வந்து அமர்ந்து கொண்டார். அடுத்ததாகப் பரிசில்கள் வழங்கப் படும். ஒலி பெருக்கியில் அறிவிப்பாளர் கூறிவிட்டு அமர, பிரதம விருந்தினர், அவரைத் தொடர்ந்து சிறப்பு விருந்தி னர்கள் பரிசில்களை வழங்கினார்கள். நித்திரை தூங்கியபடி இருந்த மாணவர்களைப் பெற்றோர் தூக்கியபடி வந்து பரிசில்களைப் பெற்று முணுமுணுத்தபடி சென்றார்கள்.தானே அழைத்துச்சென்று வீட்டில் விடுவதாக கூறி அதிபரே பிரதம விருந்தினராக வருகைதந்திருந்த உதவிக்கு கல்வித் பணிப்பாளரை அழைத்துக்கொண்டு புறப்பட்டார். நிகழ்வு சிறப்பாக இருந்ததா? மாணவர்களின் ஆற்றல்களை கவனித் தீர்களா? போன்ற கேள்விகள் நேரம் சென்றுவிட்டதற்கு மன்னிப்பு என்று அதிபர் பேசிக்கொண்டே வந்தாலும் உதவிக்கல்விப் பணிப்பாளரின் மனதிற்குள் ஏதோ புயலடிப்பது போன்ற பிரமை. அதிபரின் முயற்சி, ஆசிரியர்களின் ஒத்துழைப்புக் காரணமாக நேரம் பிந்தினாலும் ஒரு நிகழ்வைச் சிறப்பாகச் செய்து சாதித்தமை என்பன அவரது மனதிற்குள் ஓர் இனம்புரியாத மகிழ்ச்சியை கொடுத்தது. என்றாலும் மாணவர் தொகை குறைந்த பின்தங்கிய பிள்ளைகள் படிக்கின்ற இவ்வகையான பாடசாலைகளின் எதிர்காலம் அவர்முன் கேள்விக்குறியாகப் படமெடுத்து மிரட்டுவது போன்ற உணர்வும் ஏற்பட்டது. இவ்வகையான பாடசாலைகளின் பிரச்சினைகள் தொடர்பாக நாம் ஏன் சிந்திக்கத் தவறி விட்டோம்? இந்நிலைமையை மாற்றுவதற்கான முயற்சிகளில் இறங்கியே ஆக வேண்டும். இல்லையேல் அம்மாணவர்களின் எதிர்காலம் இருளடைந்துவிடும். இதை மாற்ற நானும் முயலுவேன், மனதினில் ஓர் உறுதிமொழி எடுத்துக் கொண்டே வீட்டின் கதவைத் திறந்தவர். திரும்பி அதிபரைப் பார்த்து 'பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் சிறப்பாக செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வை நடத்தியிருந்தீர்கள் எனது பாராட்டுக்கள், நீங்கள் உங்கள் உரையில் பேசிய விடயங்கள் பற்றி கல்விப்பணிப்பாளருடன் நிச்சயம் பேசுவேன் நன்றி; என்று கூறி வீட்டுக்குள் சென்றார். மகிழ்ச்சியாக திரும்பிய அதிபரின் மனதினில் பாரம் குறைந்து இலேசாவது போன்ற உணர்வு தோன்ற, தூரத்தில் புதிய வெளிச்சம் ஒன்று பிரகாசமாக ஒளிர்வதைக் கண்டார்.

◇◇◇

# காலத்தோடு சங்கமித்த மாஸ்டர் சிவலிங்கம்



மாஸ்டர் என்ற அடைமொழியால் அழைக்கப்பட்டுவந்த சிவலிங்கம் அவர்கள் காலத்தோடு இணைந்து கொண்டார் என்பது துயர் தரும் செய்தியாகும். பாடசாலையில் படிப்பிக்காமலே மாஸ்டரானவர் சிவலிங்கம். பிள்ளைகளின் மனங்களில் வாழ்ந்த சிறந்த கதை சொல்லி. இவர் ஒரு கவிஞனாக கதைஞனாக வில்லுப்பாட்டில் வல்லவராக நாடக நடிகராக மிமிக்கிரிக் கலைஞராக நகைச்சுவைப் பேச்சாளனாக அரசியல் செயற்பாட்டாளராக கூத்துக் கலைஞராக கார்ட்டூனிஸ்டாக சிறுவர் இலக்கியப் படைப்பாளனாக பல் துறைகளிலும் முத்திரை பதித்தவர். தீவிரமான ஒரு அரசியற் செயற்பாட்டாளராக திகழ்ந்த இவர் பிறகாலத்தில் தீவிரமான கடவுட் பக்தராகவும் இருந்தார். சமீப காலங்களில் அனுபவம் நிறைந்த பல அறிஞர்கள் விடைபெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவரும் அவர்களில் ஒருவரானமை மனதை வருத்தும் ஒரு பேரிழப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கிருந்தோ வந்த மரணம்

மார்கழி நாள் ஒன்றின் மாலைப்பொழுது அது. வானம் முழுதும் கரு கரு வென மேகக் கூட்டம் மூடியிருந்தது. தூரத்தில் எங்கோ முழக்கம் பறை கொட்டிக் கொண்டிருக்கிறது. ஆங்காங்கே மழைத்துளியும் விழ ஆரம்பித்திருக்கிறது. அந்தக் கிராமத்தவர்களாலும் தொலைவிலிருந்து வந்த பலராலும் கண்ணனின் வீட்டில் மக்கள் கூட்டம் நிரம்பியிருக்கிறது. தேனீக்களின் கூடொன்று கலைந்தது போல் வீடு முழுவதும் இரைச்சல். உறவினர்கள், நண்பர்கள், சக தொழிலாளிகள் என்று யார் யாரோ எல்லாம் வருகிறார்கள், போகிறார்கள், சிலர் தங்களுக்குள் முணுமுணுத்துக் கொண்டனர், சிலர் சத்தமாகவே சொல்லிக் கதறுகின்றனர்.

"நல்லா வாழ்ந்த குடும்பம் யாற்ற கண் பட்டுதோ! பாவம் அவள், இந்த பிஞ்சுக் குழந்தைகளோட இனி என்ன செய்யப் போறாளோ.!" இவ்வாறாகத் தொடங்குகிறது மணியக்காவின் அன்றைய ஊர்ப் புதினம். "நான் பெத்த பிள்ளை எனக்குக் கொள்ளி வைக்காம போய்ட்டானே..." வாயிலயும் வயிற்றிலையும் அடித் துப் புலம்புகிறாள் கனகம். கண்முன்னே பிணமாய் கிடப்ப வனைக் கண்டு பெற்றவள் படும் பாடு பார்ப்பவர்களையெல்லாம் கண்ணீர் சிந்த வைத்தது. அந்த வீடு மட்டுமன்றி ஊரே சலனப் பட்டுக் கொண்டிருக்க இப்போது வானமும் தன் பங்கிற்கு நன்றாகவே அழத் தொடங்கியிருக்கிறது.



எப்போதும் மெல்லிய புன்னகையுடன் வசீகரமாகத் தோற்றமழிக்கும் கண்ணனின் வதனம் துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்து இரத்தமும் சதையுமாகச் சிதைந்து கிடக்கிறது. வெள்ளை வேட்டி ஒன்றை துண்டு துண்டாய் கிழித்து அவனது உடலின் பாகங்கள் இழுத்துக் கட்டப்பட்டிருக்கிறது. இறக்கும் போது எதைஎதையோ நினைத்து ஏங்கியிருப்பான் என்று காட்டிக்கொடுத்துவிடுமளவுக்கு அவன் கண்கள் வெளித்தள்ளியிருந்தன. வந்தவர் எல்லோரும் கண்ணனின் உடலைப் பார்த்து விடை கொடுத்துச் செல்ல அவள் மட்டும் எதுவுமே பேசாமல் அமைதியாகப் பிணத்தைச் சுமந்திருந்த கட்டிலில் சாய்ந்திருந் தாள். அவள் மடியில் இருந்த நான்கு மாதங்களே மதிக்கத்தக்க குழந்தை ஒன்று எதுவுமே அறியாமல் பால் குடிப் பதற்காக அவள் மார்பிற் குள் புதைந் திருந்தது. குடிசையின் சுவருக்கும் கூரைக்கும் இடையே கொட்டும் மழையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த அவளை "வாயை திறந்து அழுது விடு! அப்பத்தான் மனம் ஆறும்..." என்று யாரோ பக்கத்தில் வந்து சொன்னது அவள் காதுகளை சென்றடைய முடியாத அளவுக்கு விறைத் துப் போயிருந்தாள் அவள்.

பெற்றோரை சிறு வயதிலேயே இழந்து, படிப்பையும் பாதியிலே தொலைத்து விட்டவள் கூலி வேலை பார்க்கும் பாட்டியின் அரவணைப்பில் வளர்ந்தாள். பாட்டியும் இறந்து போக கஷ்டங்கள் துரத்தும் வாழ்வில் ஒரு பிடி சோற்றுக்காய் உழைத்துப் பாடுபட்ட நாட்களில் கிடைத்த கண்ணனின் நட்பு காலவோட்டத்தில் காதலாகிவிட திருமணம் செய்து கொண்டாள். மணியக்கா கூறியது போலவே ஊர்க்கண்ணே பட்டுவிடுமளவுக்கு அவர்களது காதலும் திருமண வாழ்க்கையும் இருந்தது. தான் வாழ்வில் இழந்த சந்தோஷங் களை எல்லாம் அனுபவிக்க வேண்டும் என்ற பேரவா அவளுக்கு. மூன்று பிள்ளைகளைப் பெற்றடுத்தாள். அவர்களை நன்றாக வளர்த்தெடுத்து விட வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாயி ருந்தாள். இப்படி மகிழ்ச்சியாக ஆரம் பித்த அவளது வாழ்க்கைதான் இன்று கேள்வி குறியாகிப்போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம் போலவே காலையில் அவளிடம் விடைபெற்று வேலைக்கு சென்றவன் நிரந்தரமாக உலகை விட்டு விடைபெற்றதை அவள் மனம் ஏற்க மறுக்கிறது.

கண்ணன் எல்லோரிடமும் அன்போடும் மரியாதையோடும் பழகு பவன் தனது வேலையில் ஒருபோதும் கண்ணியம் தவறாதவன். எல்லோர் வீட்டு நிகழ்வுகளிலும் முன்னின்று உழைப்பவன். தனது சம்பளத்தின் ஒரு பகுதியை மாதந்தோறும் முதியோர் இல்லத்துக்கு நன்கொடையாக வழங்கு வான். அன்றும் அப்படித்தான் மதிய நேர உணவு விடுமுறையில் அவசரவச ரமாக உணவருந்திவிட்டு துவிச் சக்கர வண்டியை எடுத்துக் கொண்டு முதி யோர் இல்லத்தை நோக்கிச் சென்றி ருந்தான். "நேற்று மாலை வந்திருக்க வேணும்... வீட்டில கொஞ்சம் வேலை யிருந்ததால வர நேரம் கிடைக்கல...." என்று காசாளரிடம் கூறியவன், வழமை போல் பணம் செலுத்திவிட்டு முதியவர் களுடன் அமர்ந்து சிறிது நேரம் உரை யாடிவிட்டுச் செல்ல இன்று நேரம் போதவில்லையே என்றும் வேதனைப் பட்டவனாக பணத்தை செலுத்தி ரசீதைப்பெற்றுக்கொண்டு மீண்டும் அலுவலகத்தை நோக்கிப் புறப்பட் டான்.

சிறிது நேரத்தில்அலுவலகத்தை வந்தடைந்தவன் ஏதோ பதற்றமாக வேயிருந்தான். ஏதோவொரு சம்பவம் அவனைப் பதற வைத்திருக்க வேண்டும். ஆனால் அவன் யாரிடமும் பெரிதாக எதுவும் பேசிக்கொள்ளவில்லை. அலுவ லகத்தில் இடம்பெறவிருந்த கூட்டத் திற்குத் தேவையான முன் ஆயத்தங்களை செய்து முடித்துவிட்டு எதையோ நினைத்துப் பயந்தவனாகவே வியர்க்க விறுவிறுக்க முகாமையாளர் முன்னி லையில் நின்றிருந்தான். அவர்களுக் கிடையில் ஓர் நீண்ட உரையாடல் நடந்துகொண்டிருந்தது. அந்த உரையா டலைத் தொடர்ந்து தான் இரண்டு வாரங்கள் அவசர விடுமுறையில் செல்வ தாக சகஊழியர்களிடம் கூறியவன் அலுவலகத்தை விட்டு வெளியேற முற்பட்டபோது எங்கிருந்தோ வந்த துப்பாக்கிச் சன்னமொன்று அவனது தோள்ப்பட்டைகளை ஊடுருவிச் சென் றது. நிமிர்ந்து பார்த்துத் தன்னைச் சுதாகரித்துக்கொள்வதற்கு முன்னதா கவே தொடர்ந்து வந்த சன்னங்களில் இருந்து தன்னைக்காப்பாற்றிக் கொள்ள நினைத்தவன் வேகமாக அலுவலகத் தினுள் திரும்பி ஓடிச்சென்றான். தன்னைத்தொடர்ந்த துப்பாக்கிதா ரர்களிடமிருந்து காப்பாற்றுமாறு அங்கிருந்தவர்களின் கால்களில் எல்லாம் விழுந்து கெஞ்சினான். பயனேதும் கிடைக்காமல் போகவே மரணபயம் கண்ணனை வீரனாக்கிவிட அங்கிருந்த கதிரைகளாலும் கையில் கிடைத்த பொருட்களாலும் ஆயுததாரிகளுடன் சண்டையிட்டான். காயங்களோடு களைத்துப்போனவன் அங்கிருந்து ஓடிச்சென்று அறையொன்றினுள் இருந்த அலுமாரியின் பின் ஒழிந்து கொண்டான். சற்றும் எதிர்பாராமல் பின் பக்க ஜன்னல் வழியே வந்த துப் பாக்கி ரவைகள் பிடரி வழியே துளைத்து நெற்றியால் வெளியேறிவிட அவன் இப்போது பிணமாக வைக்கப் பட்டுள்ளான்.

அவளுக்கு வெள்ளைச் சேலை உடுத்தப்படுகிறது, முதல்முதலாக பட்டுப் புடவையோடு திருமணத்தில் வெட்கித் தலைகுனிந்து அமர்ந்த நாள் நினைவில் தட்டிச் சென்றது. ஊரவர் பூத்தூவ கனவு நனவாக கும்பிட்டுத் தலை குனிந்து வாங்கிய தாலி கழற் றப்பட்டு கண்ணனின் பிணத்தின் மேல் வைக்கப்பட்டது. நெற்றியில் கணவன் ஆசையாய் வைத்த குங்குமம் அவன் கைகளாலேயே வலுக்கட்டாயமாக அழிக்கப்பட்டது. ஆறு வயதுகள் மட்டுமே நிரம்பிய கண்ணனின் மகன் வேட்டியுடுத்தி பூணூல் தரித்து கொள் ளிக் குடத்துடன் முன்னே செல்ல அழ கிய பூக்களால் அலங்கரிக்கப்பட்ட பாடையிலே வைத்துக் கண்ணனின் உடலம் வீட்டை விட்டு எடுத்துச் செல்லப் படுகிறது.

நாட்டிலே பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்தப்பட்ட குழுவி லிருந்த இருவருக்கு தன் வீட்டிலே நண்பர்களாக அடைக்கலம் கொடுத்த தால் இனந்தெரியாத குழுவொன்றினால் நீண்ட நாட்களாக அச்சுறுத்தல் விடுக் கப்பட்டு வந்த நிலையில் இன்று முதியோர் இல்லத்திற்குச் சென்று வரும்போது பின்தொடர்ந்த அக்குழு வினரால் கண்ணன் கொல்லப்பட்டு விட்டான். அவனது வீட்டில் தங்கியிருந்த இரண்டு நண்பர்களும் அன்றுமுதல் காணாமல்ப் போய் விட்டார்கள்.

அவள் நாள் முழுதும் அப்ப டியே மௌனித்து கிடந்தாள் . வாழ் நாளில் பெற்றோரை, பிறந்தவர்களை, சொந்த பந்தங்களைக் கூட அறியாதவள் கணவன் இறந்தபோதும் துளி கூட கண்ணீர் சிந்தாமல் இறுக்கமாகவே இருந்தாள் என்று அவள் காது படவே பேசச்செய்தார்கள் சிலர். இன்னும் வயதிருக்கு, வாழ்க்கை இருக்கு என்று சொல்லிக் கொண்டே இன்னொரு திருமணம் செய்து வைக்க முன்வந் தார்கள் சிலர். ஆனால் தொலைந்து போன வாழ்வை எப்படி எண்ணிக் கொண்டாளோ?! அவள் மனதைக் கொள்ளை கொண்ட கண்ணனுடன் மனதுக்குள் எதைப் பேசிக் கொண் டாளோ?! தனக்குள் என்ன சத்தியம் செய்து கொண்டாளோ?! என்ன கனவு களைச் சுமந்து கொண்டாளோ?! இப்போது அவள் மீண்டும் வாழ்வைத் துரத்த தொடங்கியிருக்கிறாள், ஆனால் இம்முறை அநாதையாக இல்லை மூன்று பிள்ளைகளின் தாயாக....

◇◇◇



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமர்சனம்:

**வகை:** சிறுகதைத் தொகுப்பு **தலைப்பு:** நெல்லிமரப்பள்ளிக்கூடம்

**எழுதியவர்:** நந்தினிசேவியர் **விமர்சிப்பவர்:** அஷ்வினி வையந்தி

## ஒடுக்கப்பட்டவர்களின் வாழ்வியலை படம் பிடித்துக் காட்டும் கதைகள்

தே.சேவியர் என்ற இயற்பெயர் கொண்ட நந்தினி சேவியரின் சிறுகதைநூலே **"நெல்லிமரப் பள்ளிக்கூடம்"**. இந்நூலில் உள்ள சிறுகதைகளில் பல விளிம்பு நிலை மக்களின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகின்றன. எளிமையான நடை, சுருங்கக் கூறும் முறை, உரையாடல் பாங்கு போன்ற உத்தி முறைகளைக் கையாண்டு எழுதப் பட்டுள்ள இச்சிறுகதைகள் ஒவ்வொன்றும் ஆசிரியரின் எழுத்தாற்றலை பறைசாற்றி நிற்கின்றன.

**"நெல்லிமரப் பள்ளிக்கூடம்"** என்னும் இந்நூலிலே எட்டு சிறுகதைகள் உள்ளடங்கி யுள்ளன. எட்டுச் சிறுகதைகளும் வெவ்வேறு கருப்பொருட்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள சிறந்த கதைகளாகும். இந்நூலிலுள்ள சிறுகதைகள் யாவும் 1970 – 2004 காலப்பகுதியில் வெளிவந்துள்ளதுடன் கதைகள் யாவும் காலகட்டத்தின் அடிப்படையில் வரிசைப்படுத்தப் பட்டுள்ளன.

ஆலய திருந்தாதி மணியின் ஓசையுடன் ஆரம்பிக்கும் **"மேய்ப்பன்"** என்னும் கதை அதே மணியோசையுடன் முடிவடைகின்றது. ஆனால் கதையின் முடிவில் அடிக்கப்படும் மணி திருவந்தாதி மணியல்ல. இறந்துவிட்ட கதாநாயகன் கிறகோரிக்காகவும், மற்றவர்களுக்காகவும் அடிக்கப்பட்ட துக்கமணி. ஊரிலுள்ள கோயில் கண்முன்னே பாழடைந்து போவதைப் பார்த்து புலம்பும் பாத்திரமாக படைக்கப்பட்ட கிறகோரி இறுதியில் இரண்டு வருடங்களின் பின் கடலுக்குச் செல்கின்றார். அவர் ஒரு முடிவோடுதான் செல்கின்றார் என்பதையும் ஆசிரியர் சொல்லிவிடுகிறார். இதிலிருந்து முடிவு எவ்வாறு இருக்கும் என்பதை வாசகர்களால் உணர முடிகின்றது.

**"ஒற்றைத் தென்னை"** என்னும் கதை படகு விபத்து ஒன்றினால் மனைவி, மக்கள், பேரக்குழந்தைகளை இழந்து விட்டு தனித்து வாழ்கின்ற 65 வயதான சந்தியாக் கிழவன் பற்றியதாகும். அதே படகு விபத்தில் தன்னுடைய ஒரே மகனை இழந்துவிட்டு அவனை நினைத்து புலம்பி திரியும் தந்தை அதிரியார்க்கிழவனுக்கு படகு விபத்தில் முழுக் குடும்பத்தையும் இழந்துவிட்ட சந்தியாக்கிழவன் ஆறுதல் வார்த்தைகள் கூறி அதிரியார்க்கிழவனை தேற்றுகின்றார். தனது கவலைகளை நெஞ்சில் சுமந்து கொண்டு வெளியிலே சாதாரணமாக நடந்துகொள்ளும் சந்தியாக்கிழவனையும், புயல், மழையினால் அசையாது நிற்கும் தென்னை மரத்தினையும் ஆசிரியர் ஒப் பிட்டு காட்டும் முறை சிறந்ததாகும்.

**"கடலோரத்து குடிசைகள்"** என்னும் கதையில் மக்களின் பிரச்சினைகளுக்காக போராடும் தம்பியின் வாழ்க்கை முறை குறித்து துயரப்படும் அண்ணனின் மனநிலை எடுத்துக்காட்டப்படுகின்றது. தம்பியான எட்வேட் என்ற கதாபாத்திரத்தினூடாக சமூகத்திற்காகக் குரல் கொடுக்க வேண்டும் என்ற கருத்து எடுத்துரைக்கப்படுகின்றது. குண்டுவெடிப்பினால் இறந்த குடும்பம் ஒன்றின் கதையை இரண்டே பக்கத்தில் மிகவும் அழகாகவும், எளிமையாகவும் **"மனிதம்"** என்ற கதையில் ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். "எனக்கும் பசிக்கு துதான்... நானும் உங்களோட வந்திட்டாக்கா ஐயாவையும், அம்மாவையும் காகம் கொத்திப் போடும்... நீங்க தங்கச்சியை கொண்டுபோங்க" என்று வேலைக்காக அழைத்து வரப்பட்ட மலையகத்துச் சிறுவன் கூறும் கூற்றிலே உள்ளடக்கப் பட்டுள்ள வலியும், வேதனையும் சொல்லில் அடங்காதவை. ஆசிரியரால் கையாளப் பட்டுள்ள கருத்தாழமிக்க இத் தொடரை பாராட்டாமல் இருக்க முடியாது.

கல்வி கற்ற பாடசாலையின் நினைவுகளை **"நெல்லிமரப் பள்ளிக்கூடம்"** என்ற கதையினூடாக வெளிப்படுத் தியுள்ளார் ஆசிரியர். பள்ளிக்கூடத்தில் யார் யார் படித்தார்கள், முதல்நாள் பள்ளிக்கூடத்திற்கு சென்றபோது ஏற்பட்ட அனுபவங்கள், ஆசிரியர்கள் கற்பித்த முறைகள், பள்ளிக்கூடம் முடிந்து வரும் வழியில் செய்த குறும்புகள், பள்ளிக் கூடத்தை சுற்றியுள்ள சூழல் (தாமரைக்குளம்), பிற்காலத்தில் பள்ளிக்கூடத்தின் நிலை என்பன இக்கதை மூலம் விளக்கப்ப டுகின்றது.

**"தவனம்"** என்ற கதையில் போர்ச்சூழலும், **"விருட்சம்"** என்ற கதையில் சிறுவயதிலிருந்து ஆசிரியர் தன் வாழ்க்கையில் காணநேர்ந்த மரங்கள் பற்றிய விவரணத்தையும் கூறியுள்ளார். இறந்தவீட்டிற்கான எல்லா ஏற்பா டுகளையும் செய்து முடிந்தபின் எதிர்பாராத விதமாக நடந்த குண்டுத்தாக்குதல் இறந்த வரை உரியமுறையில் புதைக்க தடையாக இருக்கின்றது.


29 ஆம் பக்கம் பார்க்க.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. தயாளன்

# கரும்பலகை



## அத்தியாயம் 8

அடுத்தநாள் காலை நித்திரையால் எழும்பியதும் காலைக்கடன்களை முடித்துவிட்டுக் கபிலன் தன்னுடைய பொருட்களை அடுக்கி நண்பனுடைய அறைக்குச் செல்வதற்குத் தயாராகிக் கொண்டிருந்தான். பத்து மணியளவில் சுந்தரேசன் அங்கு வந்தான். கபிலன் தன்னுடைய புதிய விலாசத்தை எழுதி வீட்டுக்கார அன்ரியிடம் கொடுத்துவிட்டுச்சுந்தரேசனோடு கிளம்பினான்.

வெளியில்ஓட்டோ காத்துக் கொண்டு நின்றது. இருவருமாகச் சாமான்கள் எல்லாவற்றையும் உள்ளே வைத்துவிட்டு ஓட்டோவினுள் ஏறிக் கொண்டனர். ஐந்து நிமிடத்தில் புதியவீட்டுக்கு ஓட்டோ வந்து விட்டது. சாமான்களை இறக்கி அறையினுள் வைத்துவிட்டு இருவரும் சாவகாசமாகக் கட்டிலில் அமர்ந்தனர்.

கதவுதட்டிக் கேட்டது. கதவைத் திறந்ததும் வீட்டுக்கார அன்ரி வெளியில் நின்றிருந்தா.

“வெளியிலை வந்து தேத்தண்ணி குடியுங்கோ” என்றதும் இருவரும் வெளியில்வந்து சோபாவில் அமர்ந்தனர். வீட்டுக்கார அன்ரி தேத்தண்ணியைக் கொண்டுவந்து மேசையில் வைத்துவிட்டுத் தானும் ஒரு கதிரையில் இருந்தார்.

“ அன்ரி நீங்கள் ஊரிலை எவடம்” என்று கபிலன் கேட்டான்.

“சாவகச்சேரி” என்று அன்ரி கூற

“ அன்ரியோடை கூடப் பிறந்தவை ஆரும் இல்லையே?” என்று சுந்தரேசன் கேட்டான். இப்படி அவன் கேட்டதும் அன்ரி பதில் ஏதும் கூறாமல் நிலத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். அவவின் முகத்தில் சோகம் படர்ந்திருந்தது. கண்களில் கண்ணீர் முட்டி நின்றது. கபிலனுக்கும் சுந்தரேசனுக்கும் சங்கடமாகப் போய் விட்டது.

“ ஏன் அன்ரி.. நாங்கள் ஏதும் பிழையாகக் கேட்டிட்டமே. மன்னிச்சுக் கொள்ளுங்கோ” என்று சுந்தரேசன் கூற

“ அப்பிடியெல்லாம் ஒன்றுமில்லை. எனக்கொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி இருந்தவர். மோசம் போயிட்டார். நீங்கள் கேட்டதும் அவற்றை நினைவு வந்துது. அவரும் உங்களைப்போலைத்தான் இருப்பார்."

" ஏன் அன்ரி ஏதும் வருத்தத்திலை..."

"இல்லையில்லை. அவன் நல்ல திடகாத்திரமானவன். ஒருநாள் அவனும் அவனின்ரை நண்பனும் மோட்டர் சைக்கிளிலை போனவங்கள். போற வழியிலை கார் ஒண்டோடை மோதுப்பட்டு அவனின்ரை நண்பன் தலையிலை அடிபட்டிட்டான். இவனுக்கு ஒரு காயமும் இருக்கேல்லை. இவன் நண்பனை ஓட்டோவிலை ஏத்தி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சேர்த்துப்போட்டு வீட்டை வந்து சாப்பிட்டிட்டுப் படுத்தவன்தான் காலையிலை எழும்பவேயில்லை. என்ன இவ்வளவு நேரம் படுக்கிறான் எண்டு போய்த் தட்டினால் அசையவேயில்லை. அவரும் வந்து எழுப்பிப் பார்த்தார் எழும்பவேயில்லை. பிறகென்ன கொஸ்பிற்றலுக்குக் கொண்டு போனம் .. அங்கை அவன் எங்களைவிட்டுப் போய் நாலுமணி நேரமாச்சு தெண்டு சொன்னாங்கள் தம்பி...." என்று கூறிவிட்டு அழத் தொடங்கிவிட்டா.

அவ அழுது கொண்டிருக்க கபிலனுக்கும் சுந்தரேசனுக்கும் என்ன செய்வதென்றே புரியவில்லை. அந்த நேரம் பார்த்து அன்ரியின் கணவரும் வேலையால் உள்ளே வந்தார்.

நிலைமையைப் பார்த்து ஊகித்துக் கொண்ட அவர் " ம்... உங்களுக்கும் சொன்னாச்சா..நீங்கள் ஒண்டும் நினைக்காதையுங்கோ.. அவ தன்ரை கவலையை எல்லாரிட்டையும் சொல்லுவா பிறகு அழுவா..இது வழக்கமாய்ப் போச்சுது.."

" அதுசரி அங்கிள் ..."

" அவர் வந்து படுக்கேக்கை உள்ளுக்கை உடைவு இருந்திருக்குது. அவருக்குத் தெரியேல்லை. அந்த உடைவாலை இரத்தம் வெளியிலை வந்து...."

அத்தோடு அவர் நிறுத்திவிட்டு மனைவியையும் அழைத்துக்கொண்டு உள்ளே போய்விட்டார்.

கதையைக் கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்த கபிலனும் சுந்தரேசனும் அறைக்குள் வந்து ஒருவரோடொருவர் பேசாமல் சிறிது நேரம் இருந்தனர்.

மௌனத்தை கபிலனே உடைத்தான். "மச்சான் நான் ஒருக்கா நான் இருந்த வீட்டைபோய் கடிதம் ஏதும் வந்திருக்கா என்று பார்த்துவிட்டு வாறன்" என்று கூற "நானும்வேலை அலுவலா வெளியிலை போகவேணும்" என்று கூறிக்கொண்டு சுந்தரேசனும் கபிலனோடு புறப்பட்டான்.




தான் முன்பு இருந்த வீட்டையடைந்த கபிலன் வீட்டுக் கதவைத் தட்டிவிட்டுக் காத்திருந்தான். கதவைத் திறந்த அந்த வீட்டு அன்ரி " ஓ கபிலனே.. இப்பதான் உமக்கொரு கடிதம் வந்தது. " எனறு கடிதத்தை எடுத்துவந்து கொடுத்தார். கடிதத்தை வாங்கிக் கொண்ட கபிலன். " சரியன்ரி.. நான் வாறன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

வரும் வழியில் கடிதத்தைப் பிரித்த கபிலனுக்கு அதனுள் இருந்த விடயம் மகிழ்ச்சியைக் கொடுத்தது. கடிதம் அவன் நேர்முகப் பரீட்சைக்குச் சென்ற பெண்கள் பாடசாலையிலிருந்து வந்திருந்தது. கடிதத்தில் வெள்ளிக் கிழமை இரண்டாவது நேர்முகப் பரீட்சைக்கு வரும்படி இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனில் வெள்ளிக்கிழமை கபிலன் ஒரு பாடம் படிப் பிக்கவேண்டுமென்றும் அதன்பின்முடிவு எடுக்கப்படும் என்றும் இருந்தது. அவன் படிப்பிக்கவேண்டிய வகுப்பு 10 ஆம் வகுப்பு. அட்சர கணிதம் படிப்பிக்க வேண்டும் என்று இருந்தது.

அதற்கான தயாரிப்புகள் செய்யும் வேகத்தில் அறையை நோக்கி நடந்து கொண்டிருந்தான். அட்சர கணிதம் ஒன்றும் கபிலனுக்குக் கடினமல்ல. அறைக்குள் வந்ததும் தயாரிப்பில் இறங்கிவிட்டான்.

இதற்கிடையில்கபிலனோடு அறையைவிட்டுப் புறப்பட்ட சுந்தரேசன் பஸ்ஸெடுத்து ‘பெற்றா’வுக்கு வந்திருந்தான். பெற்றாவில் உள்ள பெரிய பதிப்பா ளர்களும் புத்தகங்கள் விற்பவர்களுமான எச் டபிள்யூ கேவ் ஸ்தாபனத்திற்கு வந்திருந்தான். இங்கு போகும் படிதான் அவனது உறவினர் கூறியிருந்தார்.

அந்த ஸ்தாபனத்திற்கு முன் நின்று அதனை அண்ணாந்து பார்த்தான். பெரியதொரு ஸ்தாபனம். கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தான். வரவேற்பிடத்தில் போய் தான் வந்தநோக்கத்தைத் தெளிவாகக் கூறினான. அங்கு நின்ற அந்த அழகான யுவதி அழகாக ஆங்கிலத்தில் அங்கிருந்த கதிரையில் இருக்கும்படி கூறிவிட்டு யாருக்கோ தொலைபேசி எடுத்து சுந்தரேசனின் வரவைத் தெரிவித்தாள்.

சிறிது நேரத்தில் சுந்தரேசன் உள்ளுக்கு அழைக்கப் பட்டான்.

அங்கு கண்ணாடி போட்ட உயர்ந்த மனிதர் ஒருவர் அவனை வரவேற்று தனக்கு முன்னால் இருந்த கதிரையில் அமரச் சொன்னார்.

அவருக்கு முன்னால் அமர்ந்த சுந்தரேசன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“ உம்மைப்பற்றி உமது சித்தப்பா கதைத்தவர். இந்த வேலை அக தணிக்கையாளர்( Internal Auditor). இந்த ஸ்தாபனத்திற்கு ஒரு அச்சகம் இரண்டு புத்தகக் கடை நான்கு ஹோட்டல்கள் உண்டு. இவற்றின் கணக்கு வழக்குகளை சரிபிழை பார்க்கிறதுதான் வேலை. ஆரம்பச் சம்பளமாக மாதத்திற்கு 200 ரூபா தருவம்” அவர் கூறுபவற்றை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான் சுந்தரேசன்.

சுந்தரேசனைப் பொறுத்தவரை ஏதோ ஒரு வேலை கிடைத்தால்போதும் என்ற நிலை.

அவரே தொடர்ந்து கதைத்தார்.

“ இண்டைக்கு இந்த வேலையைத் தந்தால் எப்ப தொடங்குவீர்?” என்று கேட்டார்.

“ நான் நாளைக்கே வரலாம்” என்றான் சுந்தரேசன்.

“சரி. நாளைக்கு வாரும். உமக்கான கடிதங்கள் எல்லாம் தயாராக இருக்கும்” என்றார் அவர்.

மன நிம்மதியோடும் சந்தோசத்தோடும் அங்கிருந்து புறப்பட்டு வெள்ளவத்தைக்கான பஸ் எடுக்குமிடத்தை நோக்கி நடந்தான்.

சுந்தரேசன் அறைக்கு வந்தபோது கபிலன் மும்முரமாக அடுத்த நாள் நடக்கப்போகும் நேர்முகப் பரீட்சைக்கான தயாரிப்புகளில் ஈடுபட்டிருந்தான்.

சுந்தரேசன் உடுப்பைக் கழற்றி மாற்றிவிட்டு

“ மச்சான் எனக்கு வேலை கிடைச்சிட்டுது.” என்றான் சந்தோசமாக. கபிலன் தனது வேலையைவிட்டுவிட்டு துள்ளிக் குதித்து சுந்தரேசனைக் கட்டிப்பிடித்தான்.

“எனக்கு நாளைக்கு பள்ளிக் கூடத்துக்கு வரச் சொல்லிக் கடிதம் வந்திருக்குது. நான் அவர்கள் முன்னிலையில் பத்தாம் வகுப்பிற்குக் கணிதம் படிப்பிக்க வேணும். அதுதான் தயாரித்துக் கொண்டிருக்கிறன்” என்றான் கபிலன்.

“ பிறகென்ன மச்சான் இரண்டுபேருக்கும் வேலை வந்தாச்சு. இனிக் கவலையே இல்லை”

இப்படிச் சந்தோசத்தோடு இருவரும் கதைத்துக் கொண்டிருந்தபோது கதவுதட்டிச் சத்தம் கேட்டது. கதவைத் திறந்தான் சுந்தரேசன். வீட்டுக்கார அன்ரி நின்றிருந்தா.

“உங்களைத் தேடி இரண்டு பொம்பிளைப் பிள்ளையள் வந்திருக்கினம்.” என்று அவ கூறினதும் சுந்தரேசன் எட்டிப் பார்த்தான் . பார்த்ததும் வியப்படைந்து கபிலனை நோக்கி “ மச்சான் வசந்தியடா” என்றான். கபிலனும் துள்ளிக் குதித்து எழும்பி வெளியே வந்தான். வெளியில் வசந்தியும் இன்னொரு பெண் பிள்ளையும் நின்றிருந்தார்கள்.

அவர்களைக் கூப்பிட்டு ஹோலில் இருந்த சோபாவில் இருக்கச் சொல்லிவிட்டு சுந்தரேசனும் கபிலனும் அவர்களுக்கு முன்னாலிருந்தனர்.

“ என்ன சுந்தர் நீரும் இஞ்சையா இருக்கிறீர். கபிலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லவேயில்லை" என்று கபிலனைப் பார்த்தாள்.
" நீர் கபிலன் வரப்போற பெண்கள் பள்ளிக்கூடத்திலையே படிப்பிக்கிறீர்?" என்ற சுந்தரேசன் வசந்தியோடு வந்த மற்றப் பெண்ணைப் பார்த்து " இவவும் அங்கையே படிப்பிக்கிறா?" என்று கேட்டான்.
"இல்லை.. இல்லை.. இவ என்ரை பிறண்ட்.. இவ்வளவு நேரம் அறிமுகப்படுத்த மறந்து போனன். இவ ஒரு பிரயாண முகவர் நிலையத்திலை வேலை செய்யிறா. பெயர் வனிதா. " என்று அறிமுகப்புடுத்தினாள்.
அப்போ அங்கை வந்த வீட்டுக்கார அன்ரி "தேத்தண்ணி போட்டு வரவே" என்று கேட்க யாரும் பதிலளிக்காமல் அவவையே பார்க்க " சரி.. சரி போட்டுக் கொண்டு வாறன்." என்று கூறிவிட்டு உள்ளே சென்றுவிட்டா.
அப்போ வசந்தி மெதுவாக " வீட்டுக்கார அன்ரிக்கு வனிதாவைத் தெரியும். பிறகு சொல்லிறன்" என்றாள்.
தேத்தண்ணியைப் போட்டுக் கொண்டு வந்த வீட்டுக்கார அன்ரி தேத்தண்ணியைக் கொடுத்துவிட்டு "தம்பி கபிலன் உதிலை இருக்கிற வனிதாதான் என்ரை தம்பியைக் கட்ட இருந்தவ. நல்ல பிள்ளை. நாங்களும் ஓமெண்டுதான் இருந்தனாங்கள். அதுக்கிடையிலை எல்லாம் பிழையாய் நடந்திட்டுது"
இதனைக் கேட்ட வனிதாவும் வசந்தியும் திடுக்கிட்டு கபிலனையையும் சுந்தரேசனையும் பார்த்தார்கள்.
அன்ரி இப்பிடி பொதுவிலை போட்டுடைப்பா என்று அவர்கள் எதிர் பார்க்கவேயில்லை.
கபிலனும் சுந்தரேசனும் முழித்தார்கள். வனிதாவை அனுதாபத்துடனும் பார்த்தார்கள்.
வசந்தி புத்திசாலித்தனமாகக் கதையை மாற்றினாள்.
"அப்ப கபிலன் நேற்றென்ன இன்ரவியுவிலை நடந்தது" என்று கேட்டாள்.
வனிதா நன்றியோடு அவளைப் பார்த்தாள்.
" கனகேள்வி கேட்டிச்சினம். ஆரும் பிள்ளையள் காதல் கடிதம் தந்தால் என்ன செய்வீர் எண்டும் கேட்டிச்சினம்"
வனிதாவும் வசந்தியும் சிரித்தார்கள். தனக்கு இதைச் சொல்லவேயில்லை என்று சுந்தரேசன் கபிலனை முறாய்த்துப் பார்த்தான்.
" கபிலன் அங்க உந்த ரைப்பிலை கன வாலுகள் இருக்குது. நீ ஒராள்தானே ஆம்பிளை. கட்டாயம் கனக்கக் காதல் கடிதங்கள் வரும்" என்றாள் வசந்தி.
" எதுக்கும் நீ குடுக்காட்டில் சரி" என்று சுந்தரேசன் நக்கல் அடித்தான்.
அவனை முறாய்த்தப் பார்த்த வசந்தி
" ஏன் குடுத்தால் என்னவாம்?" என்று எதிர்க் கேள்வி கேட்டாள் வசந்தி. இப்படி ஒரே சந்தோசமாகக் கதைத்துக் கொண்டிருந்தனர் மூவரும்.
அப்போது அங்கே வந்த வீட்டுக்கார அன்ரி
"இன்னு மொரு விசயம் சொல்லவேணும். வனிதாவுக்கு வாறமாதம் கல்யாணம். அது ஆரோடை தெரியுமே?..."
இப்படி அவ சொல்லிக் கொண்டிருக்கும்போது வனிதாவுக்கு நடுக்கமாக இருந்தது. அவர்களால் அவவை நிற்பாட்ட முடியவில்லை. அந்த அப்பாவி அன்ரி தொடரந்து...
" பின்னக் கேளுங்கோவன். என்ரை தம்பி அவற்றை நண்பரைக் காப்பாற்றி கொஸ்பிற்றல் அனுப்பிப் போட்டு வந்தவர் எண்டு சொன்னனே.. அந்தப் பையனைத்தான் வனிதா கட்டப்போறா.."
வனிதா தலையைக் குனிந்துவிட்டாள். அன்ரி கூறியபடி உள்ளே போய்விட்டா.
யாரும் எதுவும் கதைக்கவில்லை.
கபிலன்தான் கூறினான்.
" வனிதா நீங்கள் ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ. வசந்தி மாதிரி நீங்களும் எங்களுக்கொரு நண்பிதான். அந்த அன்ரி ஒரு அப்பாவி. அவவுக்கு என்ன கதைக்கிற தெண்டே தெரியேல்லை." என்று சொன்னதும் அவனை நன்றியோடு பார்த்தாள் வனிதா.
" வசந்தி நாளைக்கு உங்கடை பள்ளிக் கூடத்திலை நான் 10ஆம் வகுப்புக்கு ஒரு பாடம் எடுக்கவேணும். அவை பார்க்கப்போகினம். எப்பிடி அந்த வகுப்பு?"
" நல்ல வகுப்புதான் . அதுக்குள்ளையும் சில குழப்படியள் இருக்கு. நீங்கள் கொஞ்சம் கடுமையாக இருங்கோ" என்று கூறிவிட்டு
" சரி நாங்கள் வெளிக்கிடப்போறம். நாளைக்கு வாங்கோ சந்திப்பம் என்று கூறிவிட்டுப் புறப்பட்டார்கள்.
( இன்னும் எழுதுவோம்..)

◇◇◇




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் தீர்ப்பு

இரவு முழுதும் நித்திரையின்றி உழன்று கொண்டிருந்தார் சுந்தரத்தார். எப்படித்தான் கெஞ்சிக் கேட்டாலும் நித்திராதேவி அவர் பக்கம் வர மறுகின்றாள். அவரோடு கூடாமல் அடம்பிடிக்கின்றாள். கண்களை இறுக்க மூடி அவளைக் கட்டிப்போடப் பார்க்கின்றார். முடியவில்லை மாறாக அவர் மனதின் எண்ணவோட்டங்கள் பயங்கரமாக இருந்தது. உலகமே உறங்கிக் கொண்டிருப்பது போலவும் அதில் தான் தனித்து விழித்திருப்பது போலவும் எண்ணினார். மெல்ல படுக்கையால் சரிந்து கட்டிலின் அருகே கீழே பார்த்தார். மனைவி தையலம்மா பாயில் போர்வை நன்றாகப் போர்த்தியவாறு சுருண்டு படுத்திருந்தாள். இவரது அன்பு மனைவி தையல்நாயகியை இவர் தையலம்மா என்றுதான் செல்லமாகக் கூப்பிடுவார். விடிவிளக்கில் இவர் மனைவியின் முகம் சரியாகத் தெரியாத போதிலும் அவளின் முகத்தையே உற்றுப்பார்த்தவாறு படுத்திருந்தார். ஐம்பது வருடங்களாக இவருடன் குப்பை கொட்டுகின்றாள். சிட்டெறும்பு போல் எப்போதும் இயங்கிக் கொண்டிருக்கின்றாள். அவளின் தேய்ந்த எலும்புகளுக்கு ஒத்தடம் கொடுக்கவென அவள் தலைமாட்டில் எப்போதும் தைலங்கள் வைத்திருப்பாள்.

"இஞ்சேரப்பா முதல்ல அயன் பண்ணிட்டு பிள்ளைகளை எழுப்புங்க. சமையல் இன்னும் முடியலை. நீங்க தான் பிள்ளைகளை ஸ்கூலுக்கு வெளிக்கிடுத்திவிடனும்"

பக்கத்து அறையில் மருமகள் மகனுக்கு சன்னமாய்ச் சொன்னது சுந்தரத்தாருக்குத் தெளிவாகக் கேட்டது. அதிகாலைப் பொழுது என்பதைப் புரிந்து கொண்டார். அன்று திங்கட்கிழமை வேலை நாளுக்கான அமளிதுமளி தொடங்கிவிட்டது.



சுந்தரத்தாருக்கு இப்போ கிழமைகளும் தெரிவதில்லை. வாழ்க்கையின் மீதான பிடிமானம் தளர்ந்து போவதாக அவர் உணர்ந்தார். தலையணை ஒன்றின் மேல் உயர்த்தி வைத்திருந்த அவரது இடது கால் நழுவிக் கீழே சரிகின்றது. மெல்ல அதனைக் கைகளால் பிடித்து மீளவும் தலையணை மீது வைத்தார்.

"ஐயா! உங்கட கால் எப்போதோ செத்துப் போச்சு" என்று வைத்திய நிபுணர் ஒருவர் அன்று சொன்னது இப்போதும் பசுமரத்தாணியாய் மனதில் பதியப் போட்டுக் கிடக்கின்றது. வைத்தியத்தில் ஒளிவு மறைவு இருக்கக்கூடாது தான். அதற்காக இப்படியா? பட்டவர்த்தனமாக நெஞ்சைத் தைப்பது போல் சொல்வது, அன்றில் இருந்து அவரது மகிழ்ச்சி, நிம்மதி, உற்சாகம் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக செத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கின்றது.

மெல்ல இடது காலைத் தடவிப் பார்க்கின்றார் சுந்தரத்தார். மரக்கட்டை போல் விறைத்துக் காணப் படுகின்றது. ஒன்றிருக்கும் போது அதன் அருமை தெரிவ தில்லை. மாறாக அது இல்லாதபோது தான் அதன் அவசியம் புரிகின்றது.

சுந்தரத்தார் மண்ணைப் பொன்னாக்கும் கைசேர்ந்த விவசாயி. மழையில், வெயிலில், சேற்றில் என நடமாடி உழைக்க உதவி புரிந்த கால்கள்இப்போது அடம்பிடிக்கின்றன. இயங்க மறுக்கின்றன. அவரின் உடலின் பாரத்தைச் சுமந்த கால்கள் அவருக்கு மிகப் பாரமாகத் தெரிகின்றன.

"பட்டகாலே படும் கெட்ட குடியே கெடும்" என் பது போல அவரது மரத்துப் போன கால்தான் அண் மையில் மீளவும் அடிபட்டுவிட்டது. கால் குத்தி விழுந்ததில் அதன் முழங்கால் சிரட்டை உடைந்து விட்டது. அதனைச் சரிசெய்யப் போய் அது சில இலட்சம் ரூபாய்களை விழுங்கி விட்டது.

முன்பெல்லாம் தலைச்சுமையாய்ச் சந்தைக்குப் போகும் போதும், கலப்பை போட்டு உழுதபோதும், துலா மிதிச்சு நீர் இறைத்த போதும், குழை வண்டில் தள்ளிய போதும், வைக்கோல் போர்வை போட்ட போதும், கிணற்றில் குதித்து நீந்திய போதும் இந்தக் கால்களுக்கு நன்றி சொல் லியதும்இல்லை. அவர் அதை எண்ணிப் பெருமைப்பட்டதும் இல்லை. ஆனால் அவை மக்கர் பண்ணும் போதுதான் நாம் அதை எண்ணிப் பார்க்கின்றோம் என பல தடவை அவர் எண்ணியதுண்டு. இப்போதெல்லாம் வாஞ்சையுடன் தன் கால்களைத் தடவிப் பார்ப்பதுண்டு.

இப்போதெல்லாம் அவரால் படுக்கையை விட்டு பட்டென்று எழும்பி வெளியில் வரமுடியாது. மெல்ல எழும்பியிருந்து தன் கால்களுக்குப் பயிற்சி கொடுத்து, அவை இயைபாக்கம் பெற்ற பின்னர் தான் அவரால் மெல்ல இறங்க முடியும். அவசரத்திற்கு வெளியில் போக முடியாது. அதன் விளைவு அவர் படுக்கைக் கட்டிலின் கீழ் சிறிய பாத்திரம் ஒன்று இருக்கும். காலையில் சிறுநீருடனான அப்பாத்திரத்தை மகன் வந்து எடுத்து அப்புறப்படுத்து வான். "என்ர மலசலங்களை நீ தான் எடுக்கனும்" என தன் மகனுக்கு அவர் காட்டமாகச் சொல்லியுள்ளார். மனைவியையோ, மருமகளையோ பேரப்பிள்ளைகளையோ கஸ்ரப்படுத்த அவருக்குத் துளியும் விருப்பமில்லை. அவன் தன் சொந்த இரத்தம் அவனுக்குத் தான் கடப்பாடு இருப்பதாக அவர் எண்ணிக் கொள்கின்றார்.

சுந்தரத்தார் இப்போ கொஞ்ச நாட்களாக மனம் குழப்பிப்போய் இருக்கின்றார். தான் தன் மனைவி, பிள்ளைகளுக்குக் கஸ்ரம் கொடுப்பதாக எண்ணி வேதனை கொள்கின்றார். அதுகளின் வேலைச் சுமை போதாதென்று தானும் ஒரு பாரமாய் இருப்பது போல் உணர்கின்றார். வேலைக்கு செல்ல முதல் மகன் தான் இவரது காலைக் கடன்களுக்கு உதவி செய்கின்றான். அவரைச் சூழ உள்ளோர் அவரைத் தாங்கிப்பிடிக்கத் தயாராக உள்ளபோதும் அவர் தனக்குள்ளே மாய்ந்து மறுகிக்கொண்டு போகின்றார். மருமகளைப் பார்க்கும் போது அவருக்குக் குற்ற உணர்ச்சி மேலிட்டுக் கூனிக் குறுகிப்போகின்றார். மனைவி கூட தன்னுடன் அன்பு பாராட்டுவதைக் குறைத்துக் கொண்டு விட்டதாக அவர் தவறாக எண்ணுகின்றார். இப்போதெல்லாம் தனது இயலாமை தான் தன்னை எல்லோரிடமும் இருந்து தனிமைப்படுத்துகின்றதோ என்ற அச்சம் அவருக்கு மேலிடுகின்றது.

"அப்பா ...... எழும்புங்க ...... பாத்றூம் போகலாம் ...... எழும்புங்க" என அவரது மகன் அறைக்குள் நுழைந்தான். வேலைக்குப் போகும் அவசரமும் பதற்றமும் அவனிடம் காணப்பட்டது. கீழே தையலம்மாவைக் காணவில்லை. அவள் ஏலவே எழும்பிவிட்டிருந்தாள். மகன் கைத்தடி ஒன்றை அவரிடம் கொடுத்து மறுகையைத் தான் பிடித்துக கொண்டான். சிறுபிள்ளையைப் போல் மெல்லமெல்ல காலடி எடுத்து வைத்துப் போனார் சுந்தரத்தார். அரைமணி நேரத்தில் அவரது காலைக் கடன்களை முடித்து, முகம் கழுவி, உடுப்பு மாற்றி மீண்டும் கட்டிலில் கொண்டு வந்து அமர்த்தினான் மகன்.

"அப்பா! இது காலைமைக்குரிய குளிசைகள் சாப்பாடு தந்தாப்பிறகு இதைப் போடுங்க.... நான் வேலைக்கு வெளிக்கிடப் போறன்" என்று பரபரப்புடன் கூறிச் சென்றான். இந்த அவசர உலகில் அன்பு பாராட்டவோ ஆறுதல் வார்த்தை பேசவோ யாருக்கும் அவகாசம் இல்லைப் போலும் எனச் சுந்தரத்தார் எண்ணிப் பெருமூச்சு விட்டார். சாப்பாடு தேநீருடன் அறைக்குள் நுழைந்த மனைவியைப் பார்த்து எண்ண அலைகளின் சுழியில் இருந்து மீண்டார் சுந்தரத்தார்.

"இடியப்பமும் சொதியும் கொண்டுவந்திருக்கன் சாப்பி டுங்கோ ......."

"எனக்குப் பசிக்கலடியப்பா வயிறு கல்லு மாதிரி இருக்கு" என்றார்.

"உங்களுக்கு ஒண்டுமில்லை, தேவையில்லாம யோசிக்கிறீங்க ......." என்றாள் தையலம்மா

"நீ எனக்கு ஒரு டொக்ரம்மா ..........." என்று புன்னகைத்தார் சுந்தரத்தார். அதனை ரசிக்கும் நிலையில் அப்போது தையலம்மா இல்லை இடியப்பத்திற்குள் சொதியை ஊற்றி பிசைந்து மள மளவென தீத்தத் தொடங்கினாள். ஒன்றும் சொல்லாமல் மெண்டு விழுங்கினார் சுந்தரத்தார். சாப்பிட்ட பின் விழுங்குவதற்கான குளிசைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தாள்.

"கொஞ்ச நேரம் இதில இரடியப்பா என்னோடை கதை ........" என்று இழுத்தார். சுந்தரத்தார். அன்றைய நாளிதழையும் கண்ணாடியையும் எடுத்துக் கொடுத்த தையலம்மா.

"பேப்பர படியுங்க எனக்குத் தலைக்கு மேல வேல இருக்கு" என்று சொல்லி சாப்பாட்டுத் தட்டுடன் அறையை விட்டு வெளியேறினாள். "ஏன் ....... நீ என்ன பொட்டுப் போடப் போறியோ? என்று சுந்தரத்தார் எரிச்சலுடன் சொன்னது அவள் காதில் விழுந்ததா என அவருக்குத் தெரியவில்லை.

தந்தையின் தனிமைப் பொழுதைப் போக்கவென சில பத்திரிகைகளை வாங்கிப் போட்டிருந்தான் மகன். அவற்றை நுனிப்புல் மேய்வது போல் பார்த்தார். பின் கண்களை மூடிப் படுத்திருந்தார் சுந்தரத்தார். வீடு மிக அமைதியாக இருந்தது. கொரோனாவின் பின் இன்று தான் பாடசாலைகள் இயல்புக்கு வருகின்றன. பேரப்பிள்ளைகள் பாடசாலைக்கும், மகனும் மருமகளும் வேலைக்கும் போய்விட்டிருந்தார்கள். மகன் கோபி கச்சேரியில் வேலை பார்க்கின்றான். மருமகள் ரதி ஆசிரியை. மதியச் சாப் பாட்டிற்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்துவிட்டுப் போவாள். தையலம்மா தான் அடுப்பில் வைத்து இறக்குவாள். சிறிது நேரம் சென்றிருக்கும் அப்போது தையலம்மா யாரையோ வரவேற்கும் சத்தம் கேட்டது. இவரது பால்ய சிநேகிதர் அழகர் எனப்படும் அழகானந்தம் வந்திருந்தார். அவரைக் கண்டதும் சுந்தரத்தாருக்கு உற்சாகம் தொற்றிக் கொண்டது. அதே நேரம் கண்களில் நீர் துளிர்த்தது.

"அட ஏன் சுந்தரம். என்ன இது. சின்னப் பிள்ளைத்தனமாக இருக்கு" என்றார் அழகர். பின் நண்பரின் முதுகை வாஞ் சையுடன் தடவிக் கொடுத்தார். பின் சுந்தரத்தாரை வம்புக்கு இழுக்கும் முகமாக

"உனக்கென்ன குறை ராஜா மாதிரி ....... இருந்த இடத்தில் சாப்பாடு உன்னைக் கவனிக்கவென எத்தனை பேர் இருக்கினம் மனிசி, மகன், மருமகள், பேரப்பிள்ளைகள் ....." என்று இழுத்தார்.

"மற்றவரை எதிர்பார்த்து சாந்திருப்பதும் ஒரு வாழ்க்கையோ?" என்றார் சுந்தரத்தார் சலிப்பாக.

"யார் மற்றவர்கள். எல்லோரும் உன்னைச் சேர்ந்தவர்கள் தான்" சுந்தரத்தார் மௌனமாக விட்டத்தை வெறித்தவாறு பார்த்துக் கொண்டிருந்தார்.

"இஞ்சை பார் சுந்தரம் இளைமையை மேள தாளங்களுடன் வரவேற்கும் மனிசன் முதுமையைக் கண்டு அஞ்சுகின்றான். ஒடி ஒளிக்கின்றான். முதுமை இது காலத்தின் தீர்ப்பு. இதற்கு நானோ நீயோ விதிவிலக்கல்ல. இதிலிருந்து யாரும் தம்பிக்கவும் முடியாது. ஓடி ஒளிக்கவும் முடியாது. வாழ்க்கை எனும் வட்டத்தில் இளமையைச் சந்தோஷத்தோடு அனுபவிக்கும் மனிதன் முதுமைக் காலத்தைக் கவலையுடன் கழிக்கின்றான். முதுமையை எதிர்கொள்ளத் தயாராகின்றான் இல்லை. முதுமையும் ஓர் பருவம் என்பதை மறந்து நிற்கின்றான். ஆனால் நாம் முதுமைக் காலத்தை எதிர் கொள்ளத் தயாராக வேண்டும்" என்று ஓர் உளமருத்துவர் போல் கூறி முடித்தார் அழகர். சுந்தரத்தாரோ சிலையாக சமைந்து இருந்தார்.

"நானும் ஓர் இருதய நோயாளி எனக்கும் அண்மையில் தான் ஒப்பிரேசன் நடந்தது" என்று கூறி தன் நெஞ்சின் தளும்புகளைக் காட்டினார்.

"நெஞ்சைப் பிழந்து தான் ஒப்பிரேசன் செய்தாங்கள். சாவின் விழிம்புவரை போய் வந்தன்" என்று மெல்லச் சிரித்தார் அழகர். அவரது கைவிரல்களை இறுகப் பற்றினார் சுந்தரத்தார். சிறிது நேரம் இருவரிடையேயும் மௌனம் குடிகொண்டிருந்தது. தையலம்மா கொண்டு வந்த தேநீரை இருவரும் பருகினர். பழைய கலகலப்பு சுந்தரத்தாரிடம் தொற்றிக் கொண்டது. பழைய நினைவுகளை இருவரும் மீட்டிப்பார்த்து மகிழ்ந்தனர். இறுதியாகப் போவதற்கு விடை பெற்றார் அழகர்.

"அடிக்கடி வந்திட்டு போடாப்பா என்னவோ மனம் கொஞ்சம் லேசானது மாதிரி இருக்கு" என்றார் சுந்தரத்தார்.

"நீயும் படுத்துப் படுத்து கிடக்காமல் என்னட்ட வந்து போ" என்றார் அழகர். அழகர் சென்று சிறிது நேரத்தின் பின் பாடசாலை விட்டு பிள்ளைகளுடன் வீடு வந்த மருமகள் கை, கால் முகம் கழுவிக் கொண்டு நேரே இவர் அறைக்குள் வந்தாள். "மாமா! என்ன செய்றீங்க? இந்தாங்கோ பழனி முருகன் வீபூதி ...." என்று இவர் நெற்றியில் பூசி விட்டாள்.

"எங்கால புள்ள?" என்றார் சுந்தரத்தார்.

"என்ர சிநேகிதி ஒருத்தி இந்தியா போய் வந்தவா...." என்று கூறி உடுப்பு மாற்ற தன் அறைக்குள் சென்றாள் மருமகள். விட்டுக்கொடுப்பில், புரிந்துணர்வில், இந்தச் சின்ன சின்ன அன்பில் தான் உலகம் இன்னும் உயிர்ப்புடன் இயங்கிக் கொண்டு இருப்பதாக அப்போது உணர்ந்தார் சுந்தரத்தார்.


◇◇◇

எழுத்தை ரசிக்கத் தெரிந்தவனால் மாத்திரமே நல்ல படைப்புகளைத் தரமுடியும். உத்திகளை மட்டுமே ரசிப்பவனால் வெறும் வசனங்களையே தரமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் கோலங்கள்



மாலை மயங்கும் பொழுது, சுட்டெரித்த சூரியனை வழியனுப்பி விட்டு மருதாணி கோலம் வண்ணமிடத் தன்னை அழகு படுத்திக் கொண்டிருந்தாள் பூமித்தாய் நாளெல்லாம் ஆதவனின் கோபக்கனல்களில் வதங்கிப் போயிருந்த புள்ளினங்கள், இனிய மாலைக் கச்சேரிக்கு மெல்ல இசை கூட்டிக் கொண்டிருக்க அதற்கு மகுடம் வைத்தாற் போல் குயிலொன்று பண்ணிசைத்துக் கொண்டிருந்தது. வீட்டின் பின் வராந்தாவில் உட்கார்ந்திருந்த வழக்கமான ரசிகை கலாவிற்கு இன்று இவையெல்லாம் ஏனோ ரசிக்கவில்லை. மனமோ தறி கெட்ட குதிரையாக சிட்னியிலிருந்து மதியமே வந்து விடுவதாக சொல்லியிருந்த மகனைப் பற்றியே அசை போட்டுக் கொண்டிருந்தது. மனம் அங்கலாய்த்துக் கொண்டிருக்கும் போது மயங்கும் பொழுதின் வனப்பையோ, இசையையோ ரசிக்க முடியாமல்

" கொஞ்சம் வாயை மூடிக் கொண்டுதான் இரேன்" என்று மரத்திலிருந்த குயிலுக்குக் கேட்கும் படியாய் கொஞ்சம் உரக்கவே கத்திச் சொன்னாள் கலா. ஒற்றை ரசிகைக்காகவே கச்சேரி செய்யும் குயிலும் இன்று அவள் மனம் புரிந்தாற் போல் சட்டென்று மௌனமானது. கவியும் இருளும் அந்த ஏகாந்தத் தனிமையும் கலாவை அவள் மறக்கத் துடிக்கும் பழைய நினைவுகளுக்கு இட்டுச் சென்றது.

வெளிநாட்டுப் பொறியியலாளர் மாப்பிள்ளை என்று செல்லமாக வளர்த்த ஒரே மகளைப் பிரிந்த கவலையோ என்னமோ கலாவை மணம் முடித்து பிறிஸ்பேனுக்கு அனுப்பிய இரண்டே வருடங்களில் ஒருவர் பின் ஒருவராக அன்னையும் தந்தையும் இறந்து விட கணவனே உலகம் என்றாகிப் போனது கலாவிற்கு. கணவன் கண்ணனும் பெண்மையைப் பூஜித்து பெண்களை மதிக்கும் ஒருவனாக அமைந்து விட்ட அதிர்ஷ்டத்தில், கலாவை உள்ளங்கைகளில் வைத்துத் தாங்கினான். அவர்களின் இனிய இல்லறவாழ்விற்கு மேலும் பொலிவூட்ட மகன் நந்தனும் பிறந்து விட அவர்களின் இல்லறம் மகிழ்ச்சியால் பூத்துக் குலுங்கியது. விதியும் அவர்களைப் பார்த்துச் சிரித்தாற் போல், கண்ணனுக்கு புற்று நோய் என்று வைத்தியர்கள் பெருங் குண்டொன்றைப் போட்டதுடன் அவர்கள் அமைதியான வாழ்வில் புயல் வீசத் தொடங்கியது. ஒரு வருடத்திற்குள்ளாகவே அந்த நோயின் தாக்கத்தால் அதிகம் வருந்தாது, கலாவையும் எட்டு வயது சிறுவன் நந்தனையும் அந்நிய மண்ணில் தன்னந்தனியே விட்டு விட்டு கண்ணன் போய்ச் சேர்ந்தான். வெளியுலகம் தெரியாது, கணவனின் கைகளில் தானும் ஒரு குழந்தையாகவே இருந்து விட்ட கலாவுக்கு கணவனை இழந்த பெருஞ்சோகத்துடன் கண்களைக் கட்டிக் காட்டில் விட்டது போல தவித்துத்தான் போனாள். ஊருக்கே போய் விடலாம் என்றால் நெருங்கிய சொந்தம் யாரும் அரவணைக்க மாட்டார்கள் என்பதுடன் பொருளாதார ரீதியாக பணமும் ஒரு பிரச்சனையாக அமையும் என்பதால் மொழி தெரியாத நாட்டில் தன்னத்தனியே போராட முடிவெடுத்தாள் கலா. நண்பர்களின் உதவியுடன் கணவனின் காப்புறுதி இழப்பீட்டுத்தொகையும் கை கொடுக்க வீட்டுக் கடனை அடைத்தாள். தனக்கென ஆசைகள், ஏக்கங்கள் என்று எல்லாவற்றையும் புதைத்துக் கொண்டு, மனமொத்த கணவனுடன் வாழ்ந்த இனிய நினைவுகளுடன் மகன் நந்தனே தன் உலகம் என வாழப் பழகிக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் கஷ்டங்கள் புரிந்தாற் போல் நந்தனும் கடின உழைப்புகளுடன் சகல துறைகளிலும் பிரகாசித்து அன்னைக்கு நற்பெயர் வாங்கித் தந்து கண்ணுக்கும், கருத்துக்கும் இனியவனாய் வளர்ந்திருந்தான். பாடசாலையிலும் பல்கலைக் கழகத்திலும் புலமைப் பரிசிலில் பயின்று வைத்தியப் படிப்பை சிட்னிப் பல்கலைக் கழகத்தில் முடித்த கையோடு, அவனது அபாரமான திறமைக்கு வெகுமதியாக புகழ் பெற்ற வைத்திய சாலையில், இன்று வைத்தியராகவும் பதவியேற்று விட்டான்.

ஆறு மாதங்களின் பின் அன்னையைப் பார்ப்பதற்காக காரில் இரவே சிட்னியிலிருந்து கிளம்பி, மதிய உணவிற்கு வந்து விடுவதாக நந்தன் சொல்லியிருந்ததால், இரவு முழுவதும் தூக்கம் வராமல் புரண்டு விட்டு, மீண்டும் இளமை திரும்பி விட்ட உணர்வுடன் மகனுக்குப் பிடித்த அத்தனை வகை உணவையும் தயார் செய்து விட்டு வழி மேல் விழி வைத்து மகனையே பார்த்திருந்தாள். வண்டி யோட்டும் போது மகனைப் போனில் பேச வைக்க வேண்டாமே என்று பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டு பின்பு அழைத்த போதும் அது ஒலிப்பதிவிற்குத் தான் சென்றது. அவசரத்துக்கு உதவாத போன் என்று மனதில் திட்டிக் கொண்டவளின் மனது அச்சத்தால் தவித்து தறி கெட்டு ஓடிக் கொண்டிருந்தது.

பழைய நினைவுகளில் மூழ்கியிருந்த கலாவை பக்கத்து வீட்டு நாயின் குரைப்பு நனவுலகத்திற்கு மீட்டு வந்தது. கண்ணோரம் கண்ணீர்த்துளிகள் அரும்பியிருந்தாலும் மகனின் நினைவுகள் தந்த பெருமையால் மனம் பூரித்து நிற்பதை உணர்ந்த போது இதழோரம் நகை அரும்பியது. நேரே கணவனின் படத்தின் முன்னால் போய் நின்ற போது மனம் மேலும் உருகியது. கனிவு ததும்பும் கணவனின் கண்கள், நம் கனவை நீ தன்னந்தனியே நின்று சாதித்துக் காட்டி விட்டாய் என்று தட்டிக் கொடுப்பதைப்போல் உணர்ந்தாள். மகனை இன்னமும் காணவில்லை என்ற பதைப்பு மீண்டும் மனதில் புகுந்து விட மணிக்கூட்டைப் பார்த்தபோது இன்னமும் அதிர்ந்து போனாள். மணி இரவு பத்து. பதட்டம் உடலிலும் தொற்றிக் கொள்ள வெளிவாசலுக்கு வரவும் மகனின் கார் வீதியின் வளைவில் திரும்பவும் சரியாக இருந்தது.

பயணத்தால் முகம் வாடியிருந்தாலும், ஆறடி உயரத்தில் கம்பீரமாகக் கார்க்கதவைச் சாத்திக் கொண்டு இறங்கிய மகனை பார்த்த போது மனம் உவகையில் துள்ளியது.

"என்னம்மா? வாசலிலேயே தவம் செய்கிறீர்கள்" என்று கேட்ட மகனின் காதுகளை எட்டித் திருகிக் கொண்டு.

" எல்லாம் உன்னால் தான், ஒரு போன் பண்ணியிருக்கக் கூடாதா? பயந்து போனேன் தெரியுமா? அது சரி, ஏன் இப்படி இளைத்து விட்டாய்?"

அன்னையின் கைகளைப் பிடித்தவாறே, 'ஒவ்வொரு கேள்வியாகக் கேளுங்கள், நான் இளைத்துவிட்டேனா? இரண்டு சுற்றுப் பெருத்து விட்டேன். அவசரத்தில் போனை எடுக்க மறந்து விட்டேன், சாரிம்மா". சொன்னபடியே தன் அறைக்குள் நுழைந்தான் நந்தன்.

" சரி, சரி, குளித்து விட்டு வருகிறாயா நந்தன், சாப்பாட்டை சூடாக்கி எடுத்து வைக்கிறேன் என்ற அன்னையைப் பார்த்து,

"எனக்கு ஒன்றும் வேண்டாம் அம்மா, வரும் வழியிலேயே சாப்பிட்டு விட்டேன், நான் குளித்து விட்டு தூங்கப் போகிறேன், காலையில் பேசிக்கலாம்",

"குட் நைட் அம்மா" என்றபடி மகன் குளியலறைக்குள் சென்று விட, சமையலறைக்கு வந்தவளை மேசையிலிருந்த உணவுப் பொருள்கள் பார்த்து ஏளனமாகச் சிரிப்பது போன்றிருந்தது.

காலையிலிருந்து எதுவுமே சாப்பிடா விட்டாலும், பசியுணர்வே இல்லாததால் அனைத்தையும் எடுத்து உள்ளே வைத்து விட்டு மீண்டும் மகனின் அறையை நோக்கி வந்தாள். மகனுடன் ஏதாவது பேசலாம் என்ற அவளது நப்பாசையில் மண்ணைப் போடுவது போல் அவனது அறை இருளில் மூழ்கியிருந்தது.

"பாவம் பயண அலுப்பில் களைத்துப் போயிருப்பான் என்று தனக்குத் தானே சமாதானம் சொன்னபடி தன் அறைக்குள் சென்று படுக்கையில் வீழ்ந்தவள், மனமும் உடலும் களைத்திருந்ததால் உடனேயே தூங்கியும் விட்டாள்.

இரண்டு வாரங்களுக்காவது தன்னுடன் தங்குவான் என்ற அவளது எதிர்பார்ப்பிற்கு ஆப்பு வைப்பது போல் இரண்டு நாளிலேயே அவன் திரும்ப வேண்டும் என்று காலைத்தேநீரை அருந்தியபடியே மெல்லச் சொன்னான். அதை விட அடுத்ததாக அவன் போட்ட இடி கொஞ்சம் பெரிய அடிதான். தன்னுடன் படித்த வெள்ளையினப் பெண் ஒருவரை மணம் முடிக்க ஆசைப்படுவதாக சொன்ன அவன், அன்னையை விரைவிலேயே தன்னுடன் கூட்டிப் போவதாகச் சொன்ன வாக்குறுதியைக் காற்றில் பறக்க விட்டவனாய் தன் எதிர்காலத் திட்டங்கள் பற்றி அன்னைக்கு நன்றாகவே விளக்கமளித்தான். அவன் விருப்பத்திற்கு கலா எந்தத் தடையும் சொல்லப் போவதில்லை என்பது நந்தனுக்கு நன்றாகவே தெரியும், என்பதால் தன்னை உடன் அழைத்துப் போவதில் என்ன தடை என்பதுதான் அவளுக்குப் புரியவில்லை. அன்னையின் சோகக் கண்கள் விடுத்த கேள்வி அவனுக்குப் புரிந்திருக்க வேண்டும், அதற்கும் ஒரு விளக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னான் அவள் தவப்புதல்வன். பெண் வீட்டார் மிகுந்த பணக்காரர் என்றும், அவர்களின் வாழ்க்கை வட்டத்துடன் பழகுவது, பாவம் அன்னைக்குத்தானாம் கடினமாக இருக்கும் என்று பெற்ற தாய்க்காகத் தான் சிந்தித்ததைப் பற்றியும் சொன்னான். ஒரு மூலையிலேயேயாவது முடங்கியிருப்பேனே என்ற தாயின் மௌன மொழி அவனுக்குப் புரியாதது போல் அன்னை ஆசையாகக் காலையிலேயே தயார் செய்திருந்த காலையுணவைக் கொறித்துப் பார்த்துவிட்டு வெளியே கிளம்பி விட்டான் நந்தன்.

வாழ்க்கையின் சூனிய நிலைக்குள் வந்தது போலவும், தன் உலகம் இனி சுற்றுவதில் எந்த அர்த்தமும் இல்லை என்பது போலவும் மணித்துளிகள் நிமிடங்களாகக் கடக்க மாலை வரை அதே இடத்தில் அமர்ந்திருந்தாள் கலா. பின்னிரவு நேரத்தில் கதவு தட்டிக் கேட்க நடப்புக்கு வந்து கனவு நிலையிலேயே சென்று கதவைத் திறந்தாள் கலா. குப்பென்ற மணத்துடன் உள்ளே வந்தவன், அன்னையின் கண்களைச் சந்திக்க முடியாத குற்ற உணர்ச்சியுடன் நேரே தன் அறையில் சென்று படுத்து விட்டான். வாழ்வின் ஆதாரமே அறுந்து விட்டாற் போன்ற வலியுடன் கண்களில் இருந்து சரம் சரமாய் கண்ணீர் வடிந்து கொண்டே இருந்தது. கலா செய்து வைத்த உணவுகளுடன் காலையில் கிளம்பும் போது, உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டு நந்தன் சென்று விட அவன் செலவுக்கென வைத்து விட்டுச் சென்ற பணக்கட்டு அவளைப் பார்த்துச் சிரித்தது. கணவனின் படத்தின் முன்னால் அமர்ந்திருந்த அவளின் மனதில் ஆயிரம் எண்ணங்கள் எரிமலையாய்ச் சிதறிக் கொண்டிருந்தன. ஊரென்றால் அரட்டையடிக்க பக்கத்து வீட்டினர், அவசரத்தேவைக்குத் தோள் கொடுக்கச் சொந்தங்கள், வயது போனோரின் மனதிற்கு அமைதியைத் தர கோயில் குளங்கள், கடந்து போன இளமையை மீண்டும் திருப்பித் தரப் பேரக் குழந்தைகள், பொறுப்புகள் தீர்த்ததுமே கணவர் மனைவியிடையே மேலும் அன்புப் பாலம் இறுக்கமாக வயோதிபத்தையும் சுகமாக வரவேற்கத் தயாராயிருக்கும் தன் வயதுக்காரோரை நினைத்ததும் மேலும் சுயபச்சாதாபம் பெருகியது. இங்கு என்னால் என்ன செய்ய முடியும்? என் தள்ளாமையில் யார் என்னைக் கவனிப்பார்கள்? முதியோர் இல்லத்தில் எப்படி என்னால் எல்லோருடனும் பழக முடியும்? என்று ஆயிரம் கேள்விக்கணைகள் அவளைப் புரட்டியெடுத்தன.

எனக்கு மட்டும் ஏன் இத்தனை துயரம் என்று ஆற்றாமையுடன் கணவனின் கண்களைப் பர்த்துக் கேட்ட போது, கனிவு ததும்பும் அவனது விழிகள் அவளுக்கு வாழ்க்கையின் அர்த்தத்தைச் சொல்லி மனதுள் அமைதியை ஊட்டுவதை உணர்ந்தாள். " கடமையைச் செய், பலனை எதிர்பாராதே" என்பது போல் அவனது புன்னகை அவளுக்குள் தைரியத்தை ஊட்ட, அவள் மனமும் ஒரு நிதானத்துக்கு வந்திருந்தது. சுவரில் மாட்டி வைத்திருந்த கீதையின் மீதி வாசகங்கள் அவளுக்கு வாழக்கையின் முழுஅர்த்தத்தையும் புரிய வைத்து விட, வாழ்க்கையில் அடுத்தவருக்காகவும் வாழலாம், அன்பை அள்ளி வழங்கும் மனதிற்கு ஆயிரம் வாசல்கள் திறக்கும் என்பதும் புரிய, தான் என்ன செய்ய வேண்டும் என்பதை தீர்மானித்தவுடன் மனதில் எல்லையில்லா அமைதி சூழ்வதை உணர்ந்தாள். மாலை நேரமாகி விட்டதே, எங்கே இன்னமும் என் ரசிகையைக் காணவில்லையே என்று வீட்டின் பின்புறத் திலிருந்து குயிலொன்று மெல்லக் கூவிப்பார்த்தது. என்றோ நந்தன் மாற்றுத்திறனாளிக் குழந்தைகளின் இல்லத்திற்கு கூட்டிச் சென்று காட்டிய போது ஏதாவது செய்ய வேணுமே என்று துடித்த கலாவிற்கு இன்று அதற்கான பதில் கிடைத்தாற் போலிருந்தது. தலையை முடிந்து கொண்ட கலா, மற்றவர்களுக்காக வாழ என்று கடவுள் தந்த சந்தர்ப்பத்துக்காக நன்றி கூறியபடி எழுந்து பின் கதவைத் திறந்தாள். அவளைக் கண்டதும், தன் தொனியைக் கூட்டி இசை பாடிய குயிலின் கீதம் கூட" வாழ்க்கை இதுதான், சிறகு முளைத்தால் யாரும் தனிதான்" என்று கூறுவதைப் போலிருந்தது. மனம் லேசாகி விட, மாலை நேரத்தின் இயற்கை அழகில் மனது மயங்க. பறவைகளின் இன்னிசையில் தனை மறந்தவாறு தந்தை என்றோ அளித்திருந்த " தமிழில் பகவத் கீதை" புத்தகத்தில் மூழ்கிப் போனாள்.

◇◇◇

## அட்டைப்பட விளக்கம்

உலகத்தின் உயிர்நாடி விவசாயம். உலகத்தில் உள்ள விவசாயிகள் மண்ணில் கால்வைக்க மறுத்தால் உயிர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகிவிடும். விவசாயிகளும் அவர்களின் வாழ்க்கையும் எப்போதும் நன்றாகக் கவனிக்கப்படவேண்டும். முழு உலகையும் விவசாயிகளின் கரங்களே தாங்கி நிற்கின்றன என்பதை அட்டைப்படம் உணர்த்துகிறது. இந்தப் படம் உலகம் முழுவதும் வாழ்கின்ற விவசாயிகளுக்குச் சமர்ப்பணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகபயணி



வழமைப் போல கொழும்பு நகரின் பிரதானமாக திகழும் காலி முகத்திடல் கடற்கரையில் ஆரவாரமாக அலை மோதி கொண்டு இருக்கும் சனங்களுக்கு மத்தியில், தனிமையின் நீட்சியாக அகிலன் இறங்குபடி ஒன்றில் அமர்ந்து இயற்கையை ரசிப்பதாக இருந்தாலும் நினைவு என்னவோ இன்று நடந்த சம்பவத்தை சுற்றியே வலம் வந்து கொண்டிருந்தது. திடீரென்று அகிலனின் கைப்பேசியின் அழைப்பு மணி ஒலி கேட்க, நிகழ் உலகம் திரும்பிப் பேசலானான்.

“நான் வந்துட்டேன் டா நீ எங்க இருக்க ?” என்று அகிலனின் காதலி சங்கீதா கேட்கின்றாள்.

'' எங்க... ஆஹ.. நான் உன்ன பார்த்துட்டேன்... நேர நடந்து வா, நாம எப்பயும் உக்காந்து பேசுற படி இருக்குதெல்லா அங்க தான் '' என அகிலன் தொய்வான குரலில் பேசினான்.

'' இங்க தான் இருக்கிறியா... சரி அப்பிடி என்ன தான் பேசணும் அதுவும் நேர்ல பார்த்து... வீட்டுல ஏதும் நம்ம சீன் தெரிஞ்சு போச்சா.. என்ன டா, எப்பவும் நீ தான் லொட லொட ன்னு பேசுவ...இன்னைக்கு என்ன ஆச்சு... '' என்று சங்கீதா காதலோடு சேர்த்து சலிப்பாக வினவினாள்.

'' ஒரு விஷயம், அது சொல்லாம இருக்கவேணுமெண்டு நெனைக்கேல்ல...சொல்ல போனா அது நடந்து ஒரு நாலு வருஷம் இருக்கும்... '' இவ்வாறு அகிலன் மென்று விழுங்கி ஒவ்வொரு சொல்லாகக் கூறினான்.

இடைக்கிடையில் அலையின் பேரிரைச்சலும் குளிர் காற்றும் உடலை கிழிக்கும் விதமாக அலை மோதிக் கொண்டிருந்தது.

சங்கீதா சிறிது நிமிடம் வரை அகிலனை அதே பார்வையில் பார்த்துவிட்டு, அவன் அடுத்து சொல்ல வருவதற்கு தடை போடமால் அமைதியாக இருந்தாள்.

இடையில், மீதம் இருந்த பொரித்த இறால்வடையை விற்றால் தான் அன்றைய குவளை நிறையும் என்ற நிர்ப் பந்தத்தில் பதின்ம வயது சிறுவன் கடற்கரை ஓரமாக கூவிக்கொண்டு அவர்களை நோக்கி வந்தானா? அல்லது எதேச்சையாக வந்தானா? என்று தெரியவில்லை, சங்கீதா மற்றும் அகிலன் அருகில் வந்து நின்றான். சங்கீதா தன் பங்குக்கு இரண்டை வாங்கி கொண்டாள். ஏனோ அந்த சிறுவன் சங்கீதாவை பார்த்து “ரொம்ப நன்றி அக்கா” என்று கூறி சென்று விட்டான்.

இவர்களின் உரையாடலுக்கு மதிப்பளிக்கும் வகையில் கடல் அலையின் பேரிரைச்சலும் சற்று ஓய்வு நிலைக்கு தள்ள, அகிலன் மெதுவாகத் தன்னை ஆசுவாசப்ப டுத்திக் கொண்டு கதையை கூற ஆரம்பித்தான்.

பாடசாலையின் கடைசி வகுப்பான கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சை நெருங்கி கொண்டிருக்கும் நேரம் அது. எல்லாரும் முட்டி மோதி படித்துக் கொண்டிருந்தனர். அதிலும் ஒரு சில மாணவர்கள் படிக்காமல் பரீட்சைக் கவலை இன்றி சுற்றி திரிந்து கொண்டிருந்தனர். அகிலனும் ஒன்றும் விதி விலக்கு அல்ல. இல்லாத சேட்டை எல்லாம் நண்பர்களுடன் சேர்ந்து செய்தான். இருப்பினும், ஏறக்குறைய படிப்பில் அவன் கெட்டிக்காரன் என்பதால் பயம் குறைந்து சற்று களிப்புடனே இருந்தான்.

எப்போதும் நண்பர்கள் சூழ அரட்டை அடித்து கொண்டு பேருந்து நிலையம் வரை வந்து தாமதமாகவே வீட்டை அடையும் செயல் கொண்டிருந்த அகிலனுக்கு அன்று ஏனோ ஏமாற்றம் தான். அன்று என பார்த்து சொல்லி வைத்தது போல் பிற நண்பர்கள் இல்லாமல் தனியாக பாடசாலையில் அன்றைய நாளை கழித்து விட்டு பேருந்து நிலையம் வந்தான். வழமைக்கு மாறாக, இவனை அழைத்து செல்ல வந்து நிற்பது போல கடைசியாக சென்றடையும் புறக்கோட்டை பேருந்தில் ஏறினான்.

ஜன்னலுடன் சேர்த்த வெற்றிட இருக்கையில் அமர்ந்து கொண்டு புத்தகப்பையை திறந்து இருபது ரூபாயை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்து வைத்து கொண்டான். ஒழுங்கை பின்பற்றும் ஊழியர் போல, நடத்துனர் சரியாக இவனை குறி பார்த்த வண்ணம் அருகில் வந்து காசை பெற்றுக் கொண்டு மீதி காசை இறங்கும் போது தருவதாக ஒரு பிதற்றலை கூறி விட்டு சாரதி அருகினில் சென்று விட்டான். அகிலன் "டேய் மீதி காச வாங்கிக்கிட்டு தான்டா நான் இறங்குவேன்" என முணு முணுத்தவாறு ஜன்னல் பக்கமாக பராக்கு பார்க்க ஆரம்பித்தான்.

அப்படியே, பேருந்து இடை நிலை உணவகங்களை அமைதியாக உடைத்து கொண்டு இருக்கும் பிரபலமான தனியார் உணவகத்திற்கு உள்ள தரிப்பிடத்தில் நிற்க பயணி ஒருவர் பின்புற வாயிலில் ஏறினார். வந்தவர், அகிலன் அருகில் உட்கார அதுவரை தம் போக்கில் இருந்த சக பயணிகள் அகிலனை அவ்வப்போது வெறிக்க பார்த்து கொண்டு இருந்தனர்.

ஏதோ நிலை சரி இல்லாததை உணர்ந்தாற் போல அகிலனும் அவர்களையும் பார்த்துவிட்டு தன் அருகில் உள்ளவரோடு பகை உள்ளவன் போல, அவரிடம் இருந்து விலகி வலது பக்கம் உள்ள இருக்கைக்கு ஒன்றிற்கு மாறினான். அந்தப் பயணி திருநங்கையாவர்.

மாட்டு வண்டியே போதும் என்ற கணக்கில் பேருந்தின் மெதுவான வேகம் ஒரு சில பயணிகளுக்கு வெறுப்பை தந்தாலும், பயணம் செய்யும் கடைசி இருக்கையில் உள்ள முதிர்ந்த காதல் ஜோடி மற்றும் இளம் ஜோடிகளுக்கும் கொண்டாட்டம் தான்.

அகிலனை பார்வையிட்ட சக பயணிகள் மெதுவாக தங்கள் இயல்பு நிலைக்கு திரும்பி கொண்டிருந்தனர். அப்போது அகிலன் அருகில் இருந்த சக பயணி ஒருவர் சிங்களத்தில் பேச ஆரம்பித்தார்.

"என்ன தம்பி இடம் மாறி வந்திட்டீங்க. ஏதும் தொந்தரவு தந்தானா?" என நடுத்தர வயதுடைய ஆண் கூறினார். பதிலுக்கு அகிலன் " எனக்கு கொஞ்சம் பயம் ஆகிருச்சு... இந்த மாதிரி ஆட்கள பத்தி நான் கேள்விப்பட்டு இருக்கேன்." என சிங்கள மொழியில் நெருடலாக பேசினான்.

பின் இருக்கையில் இருக்கும் ஒரு சில பெண்கள் சம்பந்தமேயில்லாமல் சிரிப்பதை கேட்ட அகிலனுக்கு அவர்கள் சிரிப்பது எதற்கு என்று புரிந்து விட்டது. அப்ப டியே இவன் அருகில் இருந்த சக பயணி பேசினார்.

"கவனமா இருக்கனும் தம்பி..சரியான காவாலிகள்.. நாங்க பார்த்தத தான் சொல்லுறோம்..." என்று இன்னும் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தி கொண்டிருந்தார்.

தன் அருகில் இருப்பவருக்கு

"அப்பிடி எல்லாம் ஒன்னும் இல்லைங்க...பின்னாடி பொம்பள புள்ளைங்க இருக்காங்க...அது தான் கொஞ்சம் கூச்சம் ஆகிருச்சு" என்று மழுப்பி உரையாடலை முடித்துத் கொண் டான்.

அந்த திருநங்கை பயணியோ எதையும் கண்டு கொள்ளாமல் தன் தொலைபேசியில் எதையோ கிண்டியவாறு சஜகமாக இருந்தார். அப்போது அடுத்து வரும் தரிப்பிடத்தில் இறங்குவதற்கு பின் பக்கமாக வந்த நடுத்தர கணவன் - மனைவி இருவரும், இப் பயணி இருக்கும் இருக்கையோடு இணைந்த கைப்பிடியை அப் பெண்மணி பிடித்த போது தவறுதலாக அவரின் கையோடு இப் பயணியான திரு நங்கையின் கை உரசியது. சற்றென்று திகைத்து விட்டு பார்த்த கணவன் ஆத்திரத்தில் அந்த திரு நங்கையான பயணியை அடிக்க முற்பட்டு பேசினார்.

அவருடைய ஆவேசத்தைப் பார்த்த அந்த திருநங்கை பயணிக்கோ எதுவும் புரியவில்லை. மாறாக அழவும் இல்லை. கொஞ்சம் கூனி குறுகி போய் இருந்தார். அதுவரை சமயம் காத்திருந்தவர் போல அகிலன் அருகில் இருந்த பயணி எழும்பி வந்து அந்தத் திருநங்கையைப் பார்த்து தன் பங்குக்கு சிங்களத்தில் ஏதோ பேசினார்.

பதிலுக்கு அவள் "நான் எந்த தொந்தரவு குடுக்காம என் பாட்டுக்கு தான் இருந்தே..தெரியாம கை பட்டதுக்கு இவ்வளோ பெரிய பிரச்சனைய உண்டு பண்றீங்க" என அமைதியாக இருந்த திரு நங்கையான அப் பயணி ஆவேசப் பட்டார்.

நிலைமையை பார்த்து கொண்டிருந்த சாரதியும் நடத்துனரும் வண்டியை ஓரமாக நிறுத்தினர். நடத்துனர் வேகமாக பிரச்சனைக்கு மத்தியில் வந்து அந்த தம்பதியினரை இறங்க சொல்லிவிட்டு, மற்றவரை இறங்கி போங்கள் இல்லாவிடின் உட்காருங்கள் என்று கோபமாக பேசி விட்டு அப்படியே இந்த திரு நங்கை பெண்ணையும் தயவு செய்து இறங்குமாறு சிங்களத்தில் கூறினான்.

பேருந்து முழுக்க ஒரே களேபரமாக இருந்தது. அந்தத் திருநங்கை தான் இறங்க போவதில்லை என்று கூறினார். சக பயணிகளில் ஒரு சிலர் கூச்சலிட்டு இறங்குமாறு வற்புறுத்தினர். மேலும், திருநங்கையான அப் பயணியை ஒரு சிலர் தள்ளி விட கீழே விழாமல் அவர்களை உதறி தள்ளி விட்டு இறங்கிவிட்டார்.

இறங்கிய பின்பு, "உங்கட குப்பைய விட நான் பரவல...." என்று கத்தியவாறு எதிர் வீதிக்கு மாறி நடக்க ஆரம்பித்தார்.

பிறகு பிரச்சனை ஒழிந்தது என்று வண்டி கிளம்ப ஆரம்பித்து விட்டது. அகிலன் வேக வேகமாக ஜன்னலின் வழியாக அப் பயணி போகும் வரை கவனித்து கொண்டிருந்தான். அப்போது இவனுக்கு முன் இருக்கையில் இருந்த தாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனும் பேசி கொள்கின்றார்கள்.

"அம்மா அந்த அக்கா என்ன தப்பு பண்ணாங்கன்னு எல்லாரும் அவங்கள ஏசி அடிக்க போனாங்க ?"

"இவங்கள மாதிரி அவங்க இல்லைன்னு நெனைக்குறாங்க... அது தான் இவ்வளோ கோவம்."

"ஆனா அவங்க பாட்டுக்கு தானே அவங்க இருந்தாங்க.. நான் கூட அவங்கள பார்த்து சிரிச்சேன்..பதிலுக்கு அவங்களும் சிரிச்சாங்க அம்மா."

"அது இயல்பு டா கண்ணா...சரி.. சரி.. வீட்டுக்கு போயிட்டு பேசலாம்... இறங்குற இடம் கிட்ட வந்துருச்சு வா முன்னாடி போலாம்" என்று கூறி அம்மா தன் குழந்தையோடு எழும்பி செல்கின்றார்.

உரையாடலை உன்னிப்பாக்க கேட்டு கொண்டு இருந்த அகிலன் ஏனோ சற்று கூனி குறுகி புத்தகப் பையின் ஜிப்பை இரண்டு மூன்று தடவை திறந்து மூடி கொண்டிருந்தான். அந்த இருவரும் இறங்கிய பின்பும், அகிலன் மனதில் ஏராளமான எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தது. அருகில் இருந்த பயணி அந்த தாயும் மகனும் இறங்கிய தரிப்பிடத்தில் இறங்க இன்னொரு பயணி அங்கிருந்து ஏறி அகிலன் அருகில் உட்காந்து கொண்டார். ஆனால் இப்போது வந்தவருக்கு நடந்த இந்த சம்பவம் குறித்து ஒன்றும் தெரியாது அல்லவா !!!

அதன் பிறகு அன்று வீடு போய் சேர்ந்த பிறகும் இந்த சம்பவம் தான் அகிலனை அடுத்த ஓரிரு வாரங்களுக்கு அலைக் கழித்து கொண்டிருந்தது. யாரிடமும் இதை பற்றி சொல்லவில்லை.எப்போதாவது பேருந்தில் ஏறும் போதும் சரி தரிப்பிடத்தில் நிற்கும் போது சரி அந்த பயணியை பார்க்கக் கிடைக்காதா என்ற ஆவல் மனதினுள் தோன்றி கொண்டிருந்தது.

இறால் வடையை அரைவாசியாக கடித்து விட்டவாறு அகிலனின் முகத்தைப் பார்த்து கொண்டிருந்தாள் சங்கீதா. அந்த பார்வைக்கு என்ன அர்த்தம் என்று தெரியாமல் அகிலன் முழித்து விட்டுக் கேட்டான்.

"இப்ப நீ இப்பிடி பார்க்குறதுக்கு என்ன அர்த்தம் சொல்லு ?"

"இல்ல உன்ன நம்பலாமா...வேணாமா...இந்த கத உண்மையானு கொஞ்சம் கொழப்பமா இருக்கு.."

"இந்த மாதிரி பேசாத...இத்தன நாள் இல்லாம இப்போ சொல்ல எனக்கு என்ன பைத்தியமா..."

"அது தான் நானும் இப்ப கேக்கணும் இருந்தே...அவங்கள பார்த்தியா..."

"அவங்க பேரு அனன்யா... இன்னைக்கு நான் புதுசா ஜொயின் பண்ண கம்பெனி ஓட ஜெனரல் மேனேஜர்..."

"வாட் ?..."

"செம்ம ஷாக்... அதோட கொஞ்சம் கவலையாகப் போயிருச்சு.."

"என்னடா இப்படி நடந்து இருக்கு...அப்போ இந்த வேலையும் போச்சா."

கடல் அலையையே வெறித்து பார்த்து கொண்டிருந்த அகிலன், சங்கீதாவின் கைகளை இறுக பற்றி கொண்டு பேசினான்.

"அப்படி நடந்து இருந்த கூட ஜாலியாக இருந்து இருப்பேன்.. ஆனா இந்த மாதிரி என் கைய புடிச்சு ஆல் தி பெஸ்ட் னு சொன்னாங்க" என்று அகிலன் தன்னுடைய குற்றம் நீங்கியதாக எண்ணி கொண்டான். சங்கீதா வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

◇◇◇

## தியானம்

மக்களிற் பெரும்பாலோர் உடலின் ஆணைக்கு உட்பட்டவர்களே. இவர்களிலும் பலர் விலங்குகளில் இருந்து சிறிது மட்டுமே வேறுபட்டுள்ளனர். பலரால் மனதை அடக்க முடிவதில்லை. உடலையும் மனதையும் கட்டுப்படுத்துவதற்கு உடல்சார்ந்த சில உதவிகள் வேண்டும். உடலைப் போதியளவு அடக்கியபின்தான் மனதை அடக்க முடியும். மனதை வசப்படுத்தி நமது ஆணைக்கு உட்படும்படி செய்து நமது விருப்பப்படி அதன் ஆற்றல்களைக் குவித்து ஒரு முகமாக்கி செயல் புரிய நமக்கு முடியும். இப்படியாக எமது மனத்தை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து அதன் உள்ளிருக்கின்ற மெய்ப் பொருளை காண்பதற்கு ஆத்ம ஞானிகளால் போதிக்கப்பட்ட அருங்கலைகளே இந்த யோகம் தியானம் போன்ற கலைகளாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதம்

நாளை மறுநாள் நேர்முக பரிட்சைக்காக அரசவங்கியில் இருந்து அவனுக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. கல்முனையில் இருந்து கொழும்பிற்கு செல்ல வேண்டும். நண்பர்களிடம் சொல்லிப்பார்த்தான் "டேய் தொழில் இல்லாட்டி பரவாயில்லை... உயிர்தாண்டா முக்கியம் கொழும்புக்கு போறதப்பற்றியே நினைக்காத" வீட்டில் அதைவிட மேலும் பல வார்த்தைகளை கேட்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டான்,

"மகன் தொழில் இல்லாட்டி, எப்பசரி எடுத்துக்கொள்ளலாம் நீ எங்களுக்கு வேண்டும்" பெற்றோர்கள் ஒரு பிடியில் நின்றார்கள்.

"நான் யாருக்கு என்ன தீங்கு செய்தன், எனக்கு எதுவுமே நடக்காது. எனக்கு அல்லாஹ் இருக்கான் அவன் பாதுகாப்பான் நான் போகத்தான் வேண்டும்.." பிடிவாதமாக ஒற்றைக்காலில் நின்றான்.

"விசயம் தெரியுமா..கல்முனையில் இருந்து மட்டக்களப்புக்கு போன பஸ்ஸில இருந்து நம்மட ஆக்களயெல்லாம் கடத்தியிற்று போயிட்டாங்களாம்" பக்கத்து வீட்டு சல்மா இவனது தாயிடம் முறையிடுவது இவனது காதுக்கு எட்டியது. காலையில் புறப்பட்டால் எப்படியோ மாலைக்குள்ள கொழும்பை சேர்ந்திடலாம்.

தன்னோடு ஒன்றாக்க கல்முனையில் படித்த சிவாவுக்கும் இண்டவியூக்கு கடிதம் வந்திருக்கு நாங்க ரெண்டுபேரும்தான் ஒன்றாக போகப்போறம் என்று ஒரு பொய்யை சொல்லிவிட்டு தாயின் அழுகையையும் பொருட்படுத்தாது கல்முனை பஸ் தரிப்பிடத்தில் கொழும்பு பஸ்ஸை எதிர்பார்த்தவனாய் நின்றுகொண்டிருந்தான்.

வீட்டை விட்டு வெளியே சென்றால் உயிருக்கு உத்தரவாதம் இல்லை. பயங்கரவாதிகள் என்று சமூக ஊடகங்களில் உச்சரித்துக்கொண்டிருந்த காலம், சமூகங்களிடையே புரிந்துணர்வுகள் தொலைக்கப்பட்டிருந்தன மாற்று சகோதரர்கள் ஒருவரை ஒருவர் எதிரிகளாக பார்த்தார்களா அல்லது அந்த ஆளுகைக்குட்படுத்திக் கொள்ளப்பட்டார்களா என்று புரிய முடியாத நாட்கள் கல்முனையில் இருந்து மட்டக்களப்பிற்கு செல்வதென்றாலே அவரவர் இறைவனை நினைத்துகொண்டும் நேர்த்திகளோடும் கடந்து போகும் நொடிகள் தவிர்க்க முடியாத காரணங்கள் இன்றி எவரும் தூரப்பிரயாணங்களை நாடுவதே இல்லை.

உரிய வேளைக்கு இவன் எதிர்பார்த்த பேருந்து உரிய இடத்தில் உறுமிக்கொண்டு, நின்றது. பிரயாணிகள் முண்டியடித்துக்கொண்டு இருக்கைகளை நிரப்பிக் கொண்டிருந்தார்கள். இவனுக்கு இடம் கிடைக்கவில்லை எப்படி நின்று கொண்டு கொழும்புவரை செல்வது. வீடு செல்வதா? கொழும்பு செல்வதா? தலையை குழப்பிக் கொண்டான். ஒரு முறை இருக்கைகளை நோட்டமிட்டவனுக்கு ஒரு இருக்கையில் மாற்று சகோதரி தனியாக ஜன்னல் ஓரமாக இருப்பதையும் பக்கத்தில் வெறுமையாக இருக்கும் இடத்தில் ஒரு பார்சல் இருப்பதையும் அவதானித்தான். எதற்கும் கேட்டுப் பார்ப்போம்.

"மன்னிக்கனும் யாராவது இருக்காங்களா மிஸ்" அவள் எதுவும் பேசாமல் அந்த பார்சலை தன் மடியில் எடுத்து கொண்டாள். இவன் பக்கத்தில் அமர்ந்து கொண்டு "தாங்ஸ் மிஸ்" என்றான். அவள் வெளியே பார்த்துக்கொண்டு இருந்தாள்.

"எது எது எப்படியோ அது அது அப்படியே நடக்கும். இறைவன் எப்படி எப்படி நாடினானோ அது நடந்தே தீரும்" இவன் நண்பர்களுடன் அடிக்கடி சொல்லிக்கொள்ளும் அந்த வார்த்தைகளை அசைபோட்டுக் கொண்டான். பேருந்து தனது பயணத்தை தொடர்ந்தது பாண்டிருப்பு.., மருதமுனை.., நீலாவனை.. கல்லாறு..கடந்து செல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு ஊரும் பாடசாலையில் ஆசிரியர் ஒவ்வொரு மாணவனின் வருகைகளை உறுதிப்படுத்தும் போதும்

"ஏஸ் சேர், பிறஸன் சேர் "என்று மாணவர்கள் கூறிக்கொண்டு தமது இருக்கைகளில் இருந்தவாறே கைகளை உயர்த்தி காட்டும் அந்த நாட்கள் நினைவில் வந்து போனது இவனுக்கு. என்ன வாழ்க்கை இது மனிதமே இல்லாத மனிதர்கள், யாரை யார் குற்றம் சொல்வது வழிமறிப்புகள், ஆள்கடத்தல்கள், காணாமல்போதல், எவ்வளவோ ஆசைகளுடனும் எதிர்பார்ப்புகளுடனும் நடமாடி இருப்பார்கள். குரோதமான பார்வைகள் எல்லைபுறங்களில் வாழமுடியாது துரத்தப்பட்டு வாழ்விடங்களை தொலைத்து, இதற்கு முடிவே இல்லையா? அசிங்கப்பட்டுப் போகும் உலகம். சென்றமாதம் உயர்தர தனியார் வகுப்புக்கு சென்றமாணவன் இனம்தெரியாத் துப்பாக்கிக்கு இரையாகிப் போனான். அந்த நிகழ்வில் இருந்து இவன் இன்னும் விடுபட்டு போகவில்லை. இந்த இறுக்கமான வேளையில்தான் இவனுக்கு நேர்முக கடிதம் வந்திருந்தது. ம்.. என்று நீண்ட அவனின் ஒரு பெருமூச்சு, பக்கத்தில் இருந்த சகோதரியை பேசத் தூண்டியிருக்க வேண்டும். "எங்கே போகிறீர்கள்.."அவள்தான் பேச்சை ஆரம்பித்தாள். கொழும்பு செல்வதில் இருந்து வீட்டில் பொய்சொல்லிவிட்டு பிரயாணம் செய்வது வரை விபரித்தான். பேருந்து ஆரயம்பதியை நெருங்கிக் கொண்டிருந்தது. கொழும்பிலிருந்து கல்முனை நோக்கி வந்து கொண்டிருந்த பேருந்தில் வந்தவர்கள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட அந்த நிகழ்வின் நினைவுகள் இவனை தொத்திக்கொண்டது. அந்த நொடியில் அவர்கள் என்ன நினைத்திருப்பார்கள் கடைசி வார்த்தைகள், அலறல்கள் எப்படி இருந்திருக்கும். இவர்களை எதிர்பார்த்து வீட்டில் உள்ளவர்கள் எவ்வளவோ ஆசைகளுடன் இருந்திருப்பார்கள். இவன் வெளியே தெரியும் காட்சிகளைகூட ரசிக்க முடியாதவனாய் தான் கேள்வியுற்ற அந்த நிகழ்வை அசைபோட்டுக் கொண்டிருந்தபோதுதான், திடீரென இவனது பேருந்து இடைமறிக்கப்பட்டு சில ஆயுததாரிகள் ஏறிக்கொண்டார்கள். இவனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. நெற்றியில் வியர்க்க ஆரம்பித்தது. எல்லோரும் தமது அடையாள அட்டையை எடுக்கும்படி அந்த ஆயுததாரிகள் அதட்டி கொண்டு நின்றார்கள்.

"தைரியமாக இருங்கள் அடையாள அட்டையை காட்ட வேண்டாம்" பக்கதில் இருந்த அந்த சகோதரி ரகசியமாக சொன்னாள்.

"எடு..எடு.. அடையாள அட்டையை" என்று ஒரு ஆயுததாரி மரியாதைக்குறைவான வார்த்தைகளுடன் இவனுக்கு முன்னால் இருந்த ஒரு வயோதிபரை அதட்டிக்கொண்டு நின்றான். அடுத்தது இவன் முறை பக்கதில் இருந்த அந்த சகோதரி தனது கையில் கட்டி இருந்த கைக்கடிகாரத்தை கழட்டி இவனிடம் கொடுத்துவிட்டு தனது கையில் போட்டுவிடும்படி சைகை செய்தாள். எதிரே

"எங்கேபோகிறாய் எடு அடையாளஅட்டையை" இவன் பேசாமல் இருந்தான்

"என்ன வாயில! பேசாம இருக்கிறாய், நான்கேட்கிறது விளங்கல்லையாடா.."

"கதைக்கிறத மரியாதையா கதைக்கனும்" அவள்தான் பதில் சொன்னாள். இவன் அவளது கரம்பற்றி கைக்கடிகாரத்தை மாட்டிக்கொண்டிருந்தான்.

"டேய் கெதியாவாடா அவனுகள் வந்திடுவானுகள்" பேரூந்தின் கதவடியில் நின்ற அவனது மற்றைய ஆயுததாரி கட்டளையிட்டவாறே வெளியே பாய்ந்தான்.

அவனைத் தொடர்ந்து மற்றைய ஆயுததாரிகளும் பாய்ந்து பற்றையை நோக்கி ஓடினார்கள். பேருந்து நகர ஆரம்பித்தது. எதிரே அரச படையினரின் வாகன தொடரணி வந்து கொண்டிருந்தது. இவன் அவளை நன்றியோடு பார்த்தான். மனம் மனிதம் இன்னும் செத்துப் போகவில்லை என அந்தச் சகோதரியைப் பார்த்துச் சொன்னது.

◇◇◇

14 ஆம் பக்கத் தொடர்ச்சி.........

இதனால் சவுக்கு மரக்காட்டிற்குள் உடலை புதைக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஆனால் ஒரு சிலரோ "அவன் கொம்யூனிஸ்ட்காரன். அதுதான் கோயில்ச்சடங்கு செய்யாமல் மாமனை சவுக்கு மரக்காட்டிற்குள்ளை தாட்டுப்போட்டான்." என கூறிக்கொள்கின்றார்கள்.

சமூகத்திற்கு ஒருவனுடைய பிரச்சினை எப்போதும் விளங்கப்போவதே இல்லை என்ற கருத்து **"எதிர்வு"** என்னும் கதை மூலம் படம்பிடித்துக் காட்டப்படுகின்றது. பேச்சு மொழி, எளிய சொற்கள், எளிமையான விவரணம், சிறிய சொற்றொடர்கள் போன்ற உத்திகளைக் கையாண்டு சிறு வயது ஞாபகங்களை மீட்டிப்பார்த்தல், சமூக அடக்குமுறைகளுக்கு எதிரான குரல், போர்க்காலச் சூழலினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் போன்ற விடயங்களை தன் எழுத்துக்களில் கொண்டு வந்துள்ள நந்தினி சேவியரின் சிறுகதைகள் தமக்கென தனச்சிறப்புக்களை கொண்டு விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசக பார்வை:

( சிறுகதை மஞ்சரி சித்திரை இதழில் வெளிவந்த குரு சதாசிவம் அவர்கள் எழுதிய சிறுகதையான அன்பைத் தேடி என்னும் சிறுகதைபற்றி முகநூலில் படிப்பும் பாதிப்பும் எனும் தலைப்பில் அலெக்ஸ் பரந்தாமன் அவர்களால் எழுதப்பட்ட வாசக பார்வை இது)

இளவயதிலேயே கணவனை இழந்த பெண்கள் மற்றும் கணவனை இழந்து சிறு குழந்தைகளோடு வாழ்பவர்கள் தொடர்ந்தும் இச்சமூகத்தில் 'விதவை' என்ற பெயர் கொண்டு வாழ முடியுமா?

சில இடங்களில் ஓர் ஆணின் தயவின்றி பெண்ணொருத்தி வாழலாம். அப்படி அவர்கள் வாழ்வதுபோன்று எல்லோராலும் வாழ்ந்துவிட்டுப் போக முடியுமா? அதற்கான மனவலிமை மற்றும் புறச்சூழல்கள் இடங்கொடுக்குமா? கணவனை இழந்த பெண்கள்... கணவனால் கைவிடப்பட்ட பெண்கள்... அல்லது வேறு ஒரு காரணத்துக்காக தனிமைப்பட்டுப்போன பெண்கள்... என இப்படிப் பல பெண்கள் வாழும் இச்சமூகத்தில் அவர்களுக்கான பாதுகாப்புத்தான் என்ன?

பாலியல் வக்ரம்மிகுந்த இவ்வுலகில், ஒருபெண் தனித்து வாழ்வதென்பது இலகுவானதொரு நிகழ்வல்ல. ஏதோ ஒருவகையில், ஒருபெண் தனக்குப் பிடித்த ஓர் ஆணுடன் சார்ந்து வாழ்தலும், அதேபோல் ஆணானவன் பெண்ணுடன் இணைந்து வாழ்தலுமே பாதுகாப்பு மிகுந்த வாழ்க்கையாகும்.

இதனை வலியுறுத்தும் முகமாக குரு. சதாசிவம் அவர்கள் தனது 'அன்பைத்தேடி....'சிறுகதை (சிறுகதை மஞ்சரி : சித்திரை - 2022) மூலம் வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார்.

வீதிவிபத்தில் இறந்துபோன தனது கணவன் விஜய்யின் நினைவுகளை தன்மனதிலிருந்து அகற்ற முடியாதவளாய் வாழுகின்ற சியாமளா, ஒரு மருத்துவதாதி. ஒருவயதுகூட நிரம்பாத ஒரு பெண்குழந்தைக்குத் தாய் அவள். தந்தையின் முகத்தைப் பார்ப்பதற்காய் ஏங்குகிறது அக்குழந்தை. இந்நிலையில், இரண்டாம்தாரமாக அமையவந்த வாழ்க்கையை மறுத்து விடுகிறாள் சியாமளா.

இதேவேளை, வைத்தியசாலையில் டாக்டராகக் கடமையாற்றும் திருமணமாகாத வினோதன் என்பவர், மென்மையான போக்குடையவர். அவர் எல்லோருடனும் சகஜமாகப் பழகுபவர். சியாமளாவுடனும் அப்படிப் பழகும்போது, அவள் அவர்மீது சந்தேகப்பட்டு, அவரிடமிருந்து விலகி நடக்கிறாள்.

ஒருமழைநாளில் வினோதனைத் தேடிவந்த ஒருவர்மூலம் அவரது வாழ்க்கையின் பின்புலம் தெரிய வருகிறது. வினோதனைத் தேடிவந்தவர் அவரது அண்ணன் என்பதையும் புரிந்து கொள்கிறாள். பெய்யும் அடைமழைக்குள், சியாமளா தன் வேலை முடிந்து வீடு செல்ல முடியாத நிலையில், தனது அண்ணன் கேசவன் மூலம் தனது காரில் அவளை வீட்டிற்கு அனுப்பி வைக்கிறார் வினோதன். வீட்டுக்குச் சென்றதும், சாமிக்கிட்டப் போனதாக நினைத்துக் கொண்டிருக்கும் சியாமளாவின் குழந்தை அபி, கேசவனைத் தனது தந்தையென நினைத்து ஓடிவந்து அவனைக் கட்டிக் கொள்கிறது.

மறுநாள்காலை சியாமளாவை வைத்தியசாலைக்கு ஏற்றிக்கொண்டு போவதற்காக கேசவன் வந்து அவளை அழைத்துக்கொண்டு போகும்போதுதான், கேசவன்தனக்கும் தன்தம்பிக்கும் இன்னமும் ஏன் திருமணமாகவில்லை... என்ற விடயத்தைக் கூறுகிறார்.

சியாமளாவின் மனதில் ஒரு தடுமாற்றம்.

அதேவேளை, இறந்துபோன தனது கணவனின் நினைவுகளிலிருந்தும் விடுபடமுடியாத நிலையில், தனது மகளின் எதிர்காலத்திற்காக கேசவனை ஏற்றுக்கொள்ள முன்வருகிறாள். கதையின் இறுதி நகர்வில், சியாமளா படும் வேதனையை... அவளது மன உணர்வை... ஆசிரியர் இவ்வாறு விபரிக்கிறார்.

"விஜய் என்னை மன்னிச்சிடடா. அபியையும் இழந்திடுவேனோ என்று பயமாக இருக்கு. எனக்கு வேற வழி தெரியேல்ல. என்னை மன்னிச்சிடு விஜய்..."

கதையை மேலோட்டமாக வாசித்துக் கொண்டு நகர்கையில், ஆசிரியர் கூறவந்த விடயம் வாசகனுக்குப் புலப்பட மாட்டாது. சற்று ஊன்றிக் கவனிக்கும்போதுதான், மறுமணம் என்பது துணையை இழந்து நிற்கும் ஆணுக்கும்சரி, பெண்ணுக்கும்சரி அதுவொரு தவிர்க்க முடியாத இன்னொரு 'இணைச்சடங்கு' என்பதையும், குறிப்பாகப் பெண்களுக்கு மிக அவசியம் என்பதையும் ஆசிரியர் கூறவருவதை அவதானிக்க முடியும்.

அனைவரும், குறிப்பாக பெண்கள் அதுவும் துணை இழந்து நிற்கும் பெண்கள் படிக்கவேண்டிய சிறுகதை இது.

**அலெக்ஸ் பரந்தாமன்,**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மஞ்சரி சிறுகதைகள்
## ஒரு பார்வை

செ. யோகராசா

மஞ்சரி 22

### கருமுட்டை வியாபாரம் - தீபதிலகை

இக்கதையின் பேசுபொருள் இன்றைய சமூகத்தில் சகஜமான ஒன்றுதான். எனினும் இப் பிரச்சினையை ஏற்கத் தயங்கு பவர்களும் உள்ளனர். இத்தகைய சிக்கலைத் தீர்ப்பதற்கு எழுத்தாளர் காட்டும் தீர்வு பாராட்டிற்குரியதே.

### வரமொன்று தாராயோ- சியாமளா யோகேஸ்வரன்

பேசு பொருள் பழையது. பழைய விடயங்களைப் புதிய முறையில் எழுதியிருக்கலாம். முடிவினை இவ்வாறு அமைத்திருக்கலாம். " தொலைபேசியிலிருந்து அழைப்பு வந்தபோது குணா அதற்குப் பதில் கூறும் நிலையில் இல்லை."

### ஏழாம் இடத்தில் செவ்வாய் - ந.ஜெயரூபலிங்கம்

தமிழ்ச் சமூகத்தில் இவ்விடயம் எவ்வளவு தூரம் ஆழமாக ஊடுருவி இருக்கிறது என்பதனை புகலிட வாழ்க்கைச் சூழலுடன் பொருத்தி கதையை நகர்த்தி இருப்பது பாராட்டுக்குரியது. கதாசிரியரின் தூர நோக்கும் கவனத்திற்குரியது. எனினும் கதையின் நீட்சியைத் தவிர்த்திருக்கலாம்.

### விருந்தாளி - சிவரமணி

குறிப்பாக புகலிடத் தமிழ்ப் பெண்களது பண்பாடு கடந்த சில வருடங்களாக அதிர்ச்சி ஊட்டும் விதத்தில் மாறிவருவதை வெளிப்படுத்துகின்ற விதத்தில் கவனத்திற்குரிய இச் சிறு கதையின் பாத்திர வார்ப்பு சிறப்பாக அமையவில்லை. கதைப் பின்னலிலும் கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

### பழையன கழிதல் - கிருஷ்ணவேணி

புதிய கரு. வித்தியாசமான களம். மாறிவரும் சமூகச்சூழலில் பொருட்கள் மட்டுமன்றி பழைய தலைமுறையினரும் பழையன கழிதல் பட்டியலில் அடங்கக் கூடியவைகள் என்பதில் ஐயமில்லை. எனினும் புது மனேச்சரின் வரவும் அதனையொட்டி ஆபிசில் நிகழ்வனவும் பற்றிய விபரிப்பில் சினிமாவின் செல்வாக்கு இருக்கின்றது. தலைமைக் குமாஸ்தா கேசவனின் மனவுணர்வுகளை மேலும் விபரித்திருப்பின் நன்றாக அமைந்திருக்கும்.

### வாழ்க்கை வாழ்வதற்கே - கமலினி கதிர்

பேசுபொருள் பற்றிய தெரிவு மிகுந்த பாராட்டிற்குரியது. சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக துஸ்பிரயோகத்திற்குள்ளானதோடு அத்தகையவர்களுக்கு குழந்தையும் இருக்குமாயின் அதனால் ஏற்படும் பிரச்சினைகள் அனந்தம். இத்தகைய பேரவலச் சூழலில் கதாசிரியர் தரும் தீர்வு வரவேற்கக் கூடியதே. குமுதாவின் தாயை வாழ்த்துவோம். ஜெயகாந்தனின் அக்கினிப் பிரவேசம் கதையின் தாயும் யுகசந்தியில் வரும் பாட்டியும் இவ்வேளை நினைவுக்கு வருகின்றனர். குமுதாவின் தாய் பாத்திர வார்ப்பில் மேலும் கவனம் செலுத்தியிருப்பின் நன்றாகவிருந்திருக்கும்.

### புதுக்காட்டுச் சந்திக்கடை வடையும் வடிவான காதலும் - சின்னராசா உதயகுமார்

பேசுபொருள் எதுவென்பது பற்றிய தெளிவுபலதடவை வாசித்தும் புலப்படவில்லை. கதையின் நீட்சி இன்னொரு குறைபாடாக உள்ளது.

### மாற்றுப்புறம் - ராஜேந்திரன்

போர்க்கால இறுதிநாள் பற்றிய அருமையான பதிவு. எனினும் மேலும் செதுக்கப்படுவது அவசியமே.

### அப்பாயி - தர்சித்

மலையகத்தில் சொந்த வீட்டில் இல்லாதது பாரிய சமூகப் பிரச்சினையாயிருக்க கஸ்டப்பட்டு வீடுகட்டி வாழ்வோரும் எதிர்கொள்ளக் கூடிய பிரச்சினைகள் உள்ளன என்பதும் சிறப்பான முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் மேலும் செதுக்கப்படுவது அவசியமே.

### மேலதிக குறிப்புகள்.

மொழி நடையில் இலக்கண வழுவும் உள்ளடங்கும். ஒருத்தி என்பதனை ஒருவள் என டொமினிக் ஜீவா எழுதி அடி வாங்கியமை வரலாற்றுப் பதிவு. மாற்றுப் புறம் சிறுகதையின் சொற்றொடர் வாக்கிய வழுக்கள் அதிகமாக உள்ளன. "பேசுவதற்கும்"..... 'மின் விளக்குகளின்'..... 'அதனோடு'.... 'உறங்கும்' முதலான பந்திகள் . நிறுத்தற் குறியீடுகளும் மொழி நடையில் முக்கியமானவை. கணணியின் வரவு அவற்றைக் கண்டு கொள்வதில்லை. எழுத்தாளரும் அலட்டிக் கொள்வதில்லை. பல சிறுகதைகளில் இவ்வழுக்கள் உள்ளன. ( வாழ்க்கை வாழ்வதற்கே யின் முதற் பந்தி: வரமொண்டு தாராயோ தலைப்பு.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுகதை எழுதுவது எப்படி?

மு.தயாளன்

சென்ற இதழில் சிறுகதை எத்தனை பக்கங்களில் எழுதலாலமென்பதைப் பார்த்தோம். புதுமைப்பித்தன் ஒருதடவை 35 பக்கங்களில் ஒரு கதை எழுதிவிட்டு அதைச் சிறுகதை என்று கூறியதாகவும் அதைப்பற்றி வினா எழுப்பப்பட்டபோது ஒரு கதை சிறுகதையா, குறுநாவலா, சிறு நாவலா, நாவலா என்பதை வாசகன் மட்டுமே தீர்மானிக்கிறான் என்று கூறியதாக படித்திருந்தேன். இதனோடு என்னால் ஒத்துப்போக முடியவில்லை. வாசகனைப் பொறுத்தவரை எழுத்தாளர்கள் எழுதுவது எல்லாம் ஒரு கதைமட்டுமே. அதன் வகையை எழுத்தாளனே வாசகனுக்கு அறிவிக்கிறான். எழுத்தாளனின் ஒப்புவித்தலிலிருந்துதான் வாசகனின் ஆய்வு ஆரம்பிக்கிறது.

இதுவரை சிறுகதை எத்தனை பக்கங்களைக் கொண்டிருக்கவேண்டுமென்பதை யாரும் வரையறுத்துக் கொள்ளவில்லை. ஆதலால் இத் தொடரின் மூலமாக சிறுகதை ஒரு A4 தாளின் ஐந்து அல்லது அதற்குக் குறைவாக இருக்க வேண்டும் என்று வரையறை செய்து கொள்வோம். தன்னுடைய திட்டமிடலை எழுத்தாளன் இந்த வரையறைக்குள் சொல்லுவதற்கான முயற்சியைச் செய்து கொள்ளவேண்டும். இந்தப் பின்புலத்தில் இம்முறை கதையில் வரும் பாத்திரங்கள் பற்றிப் பார்ப்போம்.

## பாத்திரங்கள்

ஒரு சிறுகதையில் நீங்கள் விரும்பியவாறு பல பாத்திரங்களை உள்ளே கொண்டுவர முடியாது. ஏனென்றால் அங்கு அவற்றிற்குப் போதிய இடங்கள் இல்லை. என்னுடைய அனுபவத்தில் ஒன்று அல்லது இரண்டு பாத்திரங்கள் போதும் என்றே நினைக்கிறேன். சில சமயங்களில் கதை சொல்லும் போது சில துணைப்பாத்திரங்கள் தேவைப்படலாம். அங்கு நீங்கள் துணைப் பாத்திரங்களை உட்படுத்தலாம் ஆனால் அந்தப் பாத்திரங்கள் முழுமையடைந்த பாத்திரங்களாக இருக்கக் கூடாது. பகுதியாக கதைக்கு உதவி செய்யலாம். பலவிதங்களில் சிறுசிறு துணைப்பாத்திரங்களை நீங்கள் பயன்படுத்தலாம். கதையை நகர்த்திச் செல்லும் பிரதான பாத்திரம் ஒன்று அல்லது இரண்டாகவே இருத்தல் வேண்டும். புதிதாக எழுத முற்படுபவர்கள் மிகக் கவனமாக இதனைக் கருத்திற் கொள்ள வேண்டும். உங்களுடைய பிரதான பாத்திரங்கள் முழுமை பெற்றவையாக இருக்கவேண்டும். வாசிக்கின்ற வாசகர்கள் உணர்வு பூர்வமாக அப்பாத்திரங்களோடு ஒன்றித்து நகராவிட்டால் அவர்கள் தொடர்ந்து கதையை வாசிக்கமாட்டார்கள். கதையை ஐந்து பக்கங்கள் நகர்த்துவதற்கு வேறுபல பாத்திரங்களை அறிமுகப்படுத் தித்தான் நகர்த்தவேண்டுமென ஆரம்பகாலங்களில் நான் நினைத்ததுண்டு. ஆனால் உண்மையில் அது தவறு என்பதை பின்பு புரிந்து கொண்டேன். பாத்திரங்களை அறிமுகப்படுத்துவதைவிட ஏற்கனவே உள்ள பாத்திரத்தை முழுமைப்படுத்த வேண்டும் அல்லது அந்த சம்பவத்தை முடிந்தளவுக்கு வாசகன் விளங்கிக் கொள்ளக் கூடியளவுக்கு விரிவுபடுத்த வேண்டும். இந்த அறிவோடு அணுகு முறை பற்றிப் பார்ப்போம்.

## அணுகுமுறை(View point)

அணுகுமுறை என்பது யார் மூலமாகக் கதையைச் சொல்லப்போகிறோம் என்பதே. இதற்கு உதாரணமாக எனது புளிய மரம் என்ற கதையை எடுத்துக் கொள்வோம். இந்தக் கதை நான்கு ஏ4 தாள்களில் எழுதப் பட்டது. இங்கு இரண்டு பாத்திரங்களே கதையை நகர்த்திச் செல்கின்றன. லண்டனிலிருந்து தாய்நாட்டுக்கு பல வருடங்களின் பின் ஒருவர் செல்கிறார். அவர் ஒரு பஸ்சில் பயணம் செய்கிறார். அவருக்குப் பக்கத்தில் ஒருவர் அமர்ந்திருக்கிறார். பஸ் போய்க் கொண்டிருக்கும்போது இருவருக்குமிடையில் உரையாடல் நிகழ்கிறது. அதிலும் லண்டனிலிருந்து வந்தவர்தான் கூட உரையாடுகிறார். இவர்களின் உரையாடலில் பல பாத்திரங்கள் வந்து போகின்றன. அதற்கு மிஞ்சி அவர்களுக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. இங்கே கதையை லண்டனிலிருந்து வந்தவர் மூலமாக நான் சொல்கிறேன். ஆக நான் முன்பு சொன்ன மாதிரி கதையை நான் தேர்ந்தெடுத்த பாத்திரம் ஒன்றின் மூலமாகச் சொல்கிறேன் என்பதைக் கவனியுங்கள். மேலும் இங்கே கவனிக்க வேண்டியது என்னவென்றால் கதையின் களம் என்னுடைய பார்வையில் நகர்கிறது என்பதே. மாறாக பஸ்சில் எனக்குப் பக்கத்தில் இருந்தவர் மூலமாகக் கதையைச் சொல்லியிருந்தால் கதை அவரின் பார்வையினூடாகவே நகர்ந்திருக்கும். இது வழிவழி வந்த அணுகுமுறையாகும். ஆரம்ப எழுத்தாளர்கள் இதனைப் பின்பற்றினால் சுலபமாக நல்ல சிறுகதைகளைத் தர முடியும். இந்த அணுகு முறையிலிருந்து தேவைப்படின் நாங்கள் எங்கள் அனுபவங்களையும் வாசிப்பின் ஆழத்தையும் கொண்டு புதியவற்றை முன் கொண்டு வரலாம். ஆனால் பாத்திரங்களின் எணணிக்கையை அதிகரிக்காமலும் 5 பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தலே சாலச் சிறந்தது என்பேன்.

அணுகுமுறை என்பது சிறுகதைக்கு மிக முக்கியமான ஒன்றாகும். இன்னும்பல உதாரணங்களை அடுத்த இதழில் பார்ப்போம்.
(தொடரும்.....)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்சுமி பதிப்பகம்
# Luxmi Publications

## நூல்

* பக்கங்களின் எண்ணிக்கை 100 இற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
* சமூக முன்னேற்றம் சம்பந்தமானதாக கருப்பொருள் இருத்தல்வேண்டும்.
* கட்டுரை, கவிதை, சிறுகதை, குறுநாவல், நாவல் வகைகளாக இருக்கலாம்.

## ISBN

* இது லண்டனில் எடுக்கப்படும்
* இலங்கையில் உள்ள இலக்கம் தேவைப்படுபவர்கள் சுயமாக விண்ணப்பித்து எமக்குத் தரலாம்

## நடைமுறை

* 300 புத்தகங்கள் அச்சிடப்படும். * சகல உரிமைகளும் பதிப்பகத்தால் உள்வாங்கப்படும்.
* அச்சிடலுக்குப் படைப்பாளியிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.
* விற்பனை உரிமை பதிப்பகத்திற்குமட்டுமே உரித்து.
* படைப்பாளிக்கு அச்சிடப்பட்ட ஒரு புத்தகம் மாதிரிக்காக வழங்கப்படும்.
* மேலதிக பிரதிகள் தேவைப்படின் பதிப்பகத்திடம் படைப்பாளி கொள்வனவு செய்யலாம்.
* விற்பனை உரிமைப் பணம்(Royalty) 10% படைப்பாளிக்கு வழங்கப்படும்.

  உதாரணம்: 300 புத்தகங்களின் விற்பனை அளவு : 60000 ரூபா ( ஒரு புத்தகம் 200ரூபா)

  10 % = 6000 ரூபா ( ஆகக் கூட படைப்பாளி, புத்தகங்கள் முழுவதும் விலைப்பட்டால் 6000 ரூபா பெறுவார்)
* படைப்பாளிகள் மேலதிக புத்தகங்கள் வாங்கும்போது விலை பின்வருமாறு கணிக்கப்படும்.

  உதாரணம்: படைப்பாளி 10 புத்தகங்கள் மேலதிகமாக வாங்கினால் அவர் செலுத்த வேண்டிய உண்மையான தொகை 2000ரூபா.

  அவருக்கான விற்பனை உரிமைத் தொகை : 200 ரூபா (10% of 2000)

  புத்தகங்களுக்கு அவர் செலுத்தவேண்டிய தொகை 2000-200=1800
* புத்தக விற்பனை உரிமை பதிப்பகத்திடம் இருப்பதால் படைப்பாளி தான் வாங்கும் புத்தகங்களை கடைகளில், அல்லது புத்தகத் திருவிழாக்களில் விற்பனை செய்ய முடியாது. அவர் விரும்பினால் சுயமாக வெளியீட்டு விழா ஒன்றை வைத்து விற்பனை செய்யலாம்.
* புத்தகம் ஒன்றின் விலை புத்தகத்தினை அச்சிடுவதற்கு ஆகும் செலவினைக் கொண்டு மதிப்பிடப்படும்.
* புத்தகங்களின் தரத்தை நிர்ணயித்து ஏற்றுக் கொள்வதா? நிராகரிப்பதா? என்கின்ற உரிமை பதிப்பகத்திற்கே உரியதாகும்.
* எழுத்தாளர்கள் கீழுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும். தொலை பேசி இலக்கங்கள் லண்டன் 0044 785 2810 285 இலங்கை : 0094 76 555 4649

  மு.தயாளன்

14 Brands Road, Slough, SL3 8QP | 91, Barathi Street, Trincomalee, Srilanka

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Luxmi Education Centre

Contact us now to secure your spot and give your child the best chance to succeed and secure their future

## WHAT WE OFFER

YEARS1-3
MATHS, ENGLISH
YEARS4-5(11PLUS)
MATHS, ENGLISH, VERBAL REASONING, NON VERBAL REASONING
YEAR6
MATHS, ENGLISH, SCIENCE
YEAR7-9
MATHS, ENGLISH, PHYSICS, CHEMISTRY, BIOLOGY
YEAR10-13
MATHS, PHYSICS, CHEMISTRY, BIOLOGY

## WHY CHOOSE US?

### BESPOKE RESOURCES

We use our own teaching material created in house for Maths, English and Science





### EXPERIENCED TEACHERS

All our tutors are experienced undergraduates or currently teaching in schools

### INDIVIDUAL ATTENTION

We ensure students are taught all topics in its entirety. We ensure no one is left with a doubt.



Contact Details:

Tel: 0208 573 0368
Mob: 07852810285
website@Leconline.co.uk
www.leconline.co.uk

Luxmi Education Centre - 101A Blyth Road, Hayes, UB3 1DB, UK

Design by LEC Digital Design

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org